ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் : 1969 பெப்ரவரி சமய - சமூக - இலக்கிய வெளியீடு பெப்ரவரி 2010 25/=




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்


**பெப்ரவரி 2010**

**மலர்: 42** **இதழ்: 01**

**ஆசிரியர்**
றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
வயலற் சந்திரசேகரம்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

**கணினி வடிவமைப்பு**
நிரோான்

**ஓவியங்கள்**
சுதா

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.


# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | : | 01 |
| வாழ்வின் அடித்தளம் | : | 02 |
| வறுமையைத் தா (கவிதை) | : | 04 |
| அனைத்து உயிரின... | : | 05 |
| யாழ்ப்பாணம் என்னும்... | : | 07 |
| கடுகுக்கதை | : | 09 |
| சிலுவைப் போர் | : | 10 |
| சீர்திருத்தவாதி (சிறுகதை) | : | 11 |
| மாணவர் பக்கம் | : | 14 |
| உங்கள் சுகமான... | : | 15 |
| மூன்று கிறித்தவ தமிழ்... | : | 16 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | : | 18 |
| மருத்துவம் (சிறுநீரகங்களின்...) | : | 20 |
| முதலில் நல்ல... | : | 23 |
| இலக்கிய மஞ்சரி | : | 25 |
| விவிலியம் கற்போம் | : | 27 |
| அறிவை வளர்ப்போம் | : | 28 |


**ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)**


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com



விலை : 25/=
ஆண்டு சந்தா : 400/=
(தபாற்செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு...

வன்முறைகளோடு ஆரம்பித்து வன்முறைகளோடேயே முடிவடைந்திருக்கின்றது நிறைவேற்று அதிகாரத்துக்குரிய ஜனாதிபதித் தேர்தல்.

அமோக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியடைந்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. கடைசி நேரத்தில் இனவாதத்தைக் கக்கியதால் பேரினவாத சிங்கள வாக்குகள் ராஜபக்ஷவை ஆட்சி பீடம் ஏறவைத்திருக்கிறது.

தமிழர்கள் உட்பட நாட்டின் புத்திஜீவிகள் எதிர்பார்த்தவை: அதிகாரப் பரவலாக்கல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிப்பு, பொருட்களுக்கான விலை குறைப்பு, அபிவிருத்தி மற்றும் குடும்ப அராஜகமற்ற ஆட்சி முறைமை என்பனவாகும்.

வடக்கு, கிழக்கு மக்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தி நாட்டிற்கும், சர்வதேசத்திற்கும் தங்கள் எதிர்பார்ப்பையும், உணர்வுகளையும் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

அதாவது நேற்று முளைத்த காளான்களுக்கும், சில்லறைக் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் செவிசாய்க்கப்போவது கிடையாது என்பதையும், வாழையடி வாழையாக வந்த அரசியல் அனுபவமுள்ள மூத்த அரசியல் தலைவர்களுக்கே செவிசாய்ப்போம் என்பதையும், அபிவிருத்தியைவிட அதிகாரப் பரவலாக்கல் மூலம் சுயநிர்ணய உரிமைகள்தான் அவசியம் என்பதையும் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

தமிழால் பேசி தமிழ் வாக்குகளைக் கவர்ந்துவிடலாம் என்பதும் மூடநம்பிக்கை; ஆங்காங்கே சில அபிவிருத்திகளைக் காட்டி பாசாங்கு செய்வதும் வீணானதே.

எனவே தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமையைக் கொடுத்து, அதிகாரத்தைப் பகிர்ந்து, விலைவாசிகளைக் குறைத்து, சுமைகளை அகற்றி, வேலைவாய்ப்பிற்கான வசதிவாய்ப்புகளை அதிகரித்தால் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். நாட்டை நேசிப்பவர்கள், நேசிக்காதவர்கள் என்ற பூச்சாண்டி வார்த்தைகளை உடன் நிறுத்தி யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளும் பட்சத்தில் அனைத்து மக்கள் மனங்களையும் வென்று விடலாம்.

இது தனிப்பட்ட ஒரு மனிதருக்கான அறிவுரை மாத்திரமல்ல. மாறாக நம் எல்லோருக்குமான அறிவுரையே. ஏனெனில் நாம் ஒவ்வொருவரும் தனிமனித சுதந்திரத்தை மதிக்கப் பழகவேண்டும். மற்றவனை ஏறி மிதிக்கும் ஏகாதிபத்தியத்தை நசுக்கவேண்டும். பாசிசக் கொள்கைகளை வேரோடு பிடுங்கவேண்டும்.

அதாவது எவருமே இந்த உலகில் நீண்ட நாட்கள் வாழப்போவதில்லை. பொன்னும் பொருளும், பதவியும் பட்டமும் நீண்ட நாட்கள் நீடிக்கப்போவதில்லை என்பதை உளமாற ஏற்று நடக்கவேண்டும். இந்தப் பேருண்மையைத்தான் விபூதிப் புதனும் அதையொட்டிய தவக்காலமும் உணர்த்தி நிற்கின்றன. மனிதனே நீ மண்ணாக இருக்கின்றாய்; மண்ணுக்கே திரும்புவாய், மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள் என்றவாறு அறைகூவல் விடுக்கின்றது. நமது சுயநலப் பாவங்களுக்காய் தினந்தினம் மரிப்போம். மனிதநேயச் செயல்களைச் செய்து மனிதனுக்கும் இறைவனுக்கும் ஏற்புடையவராய் வாழ முற்படுவோம். தவக்காலத்தில் தனித்திருந்து செபித்து, தானதர்மங்கள் புரிந்து, ஒறுத்தல்கள் பல செய்து பசியின் கொடுமையை உணர்ந்து ஏழை, எளியவர்களை ஒதுக்காது அவர்களும் வாழ ஆவண செய்வோம்.

– ஆசிரியர்



## இறைவாக்கு

"நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள்; நீதியை நாடித் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள்; திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள்."

(எசாயா: 1:17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# வாழ்வின் அடித்தளம்

ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்

வாழ்வின் அடித்தளம் - அது அன்பாகத்தான் இருக்க முடியும். இறைவனை அண்டியவர் வாழ்வு என்றுமே அன்பைத்தான் அடித்தளமாகக் கொண்டிருக்கும். பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி அன்புசெய் என்கின்ற கட்டளை எங்குமே வியாபித்திருப்பதை நாம் காணலாம்.

இருந்தாலும், புதிய ஏற்பாட்டிலே கிறீஸ்துவின் "அன்பு செய்" என்கின்ற கட்டளையானது மிகவும் எளிமையானதாக அமைகிறது; அவரது கட்டளை தனித்துவமானது. தனிமனிதனை முன்னிலைப்படுத்தி அன்பு செய்ய அவர் சொல்லித் தருகின்றார். உன்னை நீ அன்பு செய்வது போல அடுத்தவரை - உன் அயலானை அன்பு செய். நம்மை நாம் அன்பு செய்யவேண்டும் என்றும் எந்தளவுக்கு எம்மை அன்பு செய்கிறோமோ அந்தளவுக்கு ஏன்? அதற்கு மேலாகவும் கூட அன்பு செய்யச் சொல்லியும் அவர் சொல்லித் தருகின்றார்; அதைச் செயலிலும் காட்டுகின்றார்.

ஒவ்வொருவனும் தன்னைத் தானே அன்பு செய்யும் போதும் கவனித்துக் கொள்ளும் போதும் வாழ்க்கை அவனுக்கு அர்த்தம் உள்ளதாக மாறுகிறது. தனக்கான தேவைகள் என்ன என்பதை அவனால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது. அப்படி அடையாளம் கண்டுகொண்டவற்றைத் தேடிக்கொண்டு தன் வாழ்வு இன்னும் வளமாக அமைவதை அவனால் உறுதிப்படுத்திக்கொள்ள முடிகிறது. வாழ்வை நேசிக்கின்ற ஒருவனாக அவன் மாறி விடுகின்றான். இப்படிப்பட்டவன் மற்றவரை அன்பு செய்கின்றபோது அவர்களின் தேவை எதுவாக இருக்க முடியும்? அவர்களது ஆசை, அபிலாசைகள் எப்படியாக அமையக்கூடும் என்பவற்றை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஓரளவுக்காவது அறிந்திருக்கக்கூடும். எனவே, தன் வாழ்வை நிறைவு செய்பவை பற்றி அறிந்திருக்கும் அவன் மற்றவர் வாழ்வு நிறைவு பெற என்ன தேவை என்பதையும் அறிந்துகொள்ள முடியும். அந்தத் தேவைகளை மற்றவர் நிறைவேற்றிக்கொள்ள தன்னாலானதைச் செய்ய அவன் முன்வருவான். ஏனெனில் தன் வாழ்வு நிறைவுபெற எது தேவை என்பதை அவன் அறிந்திருக்கின்றான் அல்லவா? இதனால்தான் உன்னைப்போல் உன் அயலானையும் என்று கிறிஸ்து வலியுறுத்தி இருக்கிறார். தான் துன்புறுவதை விரும்பாத ஒருவன் பிறரைத் துன்புறுத்த முன்வரமாட்டான்.

கிறிஸ்துவின் அன்புக் கட்டளை தூய பவுலை நன்கு சிந்திக்க வைத்திருக்க வேண்டும். கிறிஸ்தவர்களை வதைக்கவென்று கிளம்பிய தலையாரி அவர். வதைக்கப்படும் கிறிஸ்தவர்கள் தம் விசுவாசத்தில் காட்டிய உறுதி, தம்மைத் துன்புறுத்துபவர்களை மன்னித்து நின்ற மாதிரி இதையெல்லாம் தம் மனக்கண் முன்னே கொண்டுவந்து பார்த்தவராகத் தெரிகின்றார். இதனால் கிறிஸ்து சொன்ன அன்பை மேலும் மெருகூட்டி தாம் போதனை செய்த இடங்களில் மக்களுக்கு இலகுவாக - அன்பின் பரிமாணத்தை அவர்கள் இலகுவாகக் கண்டுணரும்படி அன்பைப் பற்றி அவர் பாடம்சொல்லித் தருகின்றார்.

அன்புதான் எம்வாழ்வில் என்றும் அடிநாதமாக இருக்கவேண்டும். மனிதன் உயிர்வாழ உடலில் குருதி எந்தளவுக்கு முக்கியமோ அந்தளவுக்கு மனிதம் உயிர்வாழ, மனித வாழ்வு அர்த்தம் பெற அன்பு தேவை என்பதை வலியுறுத்தி பின்வருமாறு கூறக் காண்கின்றோம்.

"நான் என்னதான் விண்ணவர் போல மேலான மொழி பேசினாலும் அன்பு அதிலே வெளிப்படாது போனால் வெறுமனே கலகலக்கும் வெண்கலம் போலும், அர்த்தமில்லாமல் ஒலிக்கும் தாளம் போலவும்தான் இருப்பேன். இரசித்துக் கேட்கக்கூடிய இனிமையும் நாதமும் அங்கிராது"


"இறைவாக்கு உரைப்பவனாகவும், கடவுள் பற்றி நிறைய அறிந்திருப்பவனாகவும், மலைகளைத் தகர்க்கும் வலிமையுள்ள விசுவாசத்தைக் கொண்டிருப்பவனாகவும் இருக்கக்கூடும். ஆனாலும் நான் அன்பில்லாத ஒருவனாக இருந்தால் இவை அத்தனையும் செல்லாக் காசே!"

"நான் மற்றவர்க்குத் தானதர்மங்களால் வாழ்வு கொடுத்திருந்தாலும், உடலை - அதன் உறுப்புகளை மற்றவர்க்குத் தானம் செய்து எஞ்சிய உடலை எரித்துவிடக் கொடுத்து விட்டாலும் கூட அன்பை அடித்தளமாகக் கொண்டு அந்த உன்னதக் கொடைகள் அமைந்திருக்காவிட்டால் அது வெறுமனே ஓடுகிற தண்ணீரில் கரைத்துவிட்ட உப்பாகத்தான் இருக்கமுடியும்"

அன்பு காட்டும் பண்புகள் அன்பின் மகத்துவத்திற்குச் சாட்சியாகும். அன்பு பொறுமை உள்ளது, நல்லதையே செய்யும், எனவே தீங்கிழைக்காது. அன்பு கோபம் கொள்ளாது, பொறாமை கொள்ளாது, தீவினையில் மகிழாது. எனவே மற்றவர் தாழ்வில் சிரிக்காது - அகமகிழாது. அன்பு அடுத்தவர் வாழ்வு கண்டு மகிழும்; அவன் தாழ்வில் துணை நின்று தேற்றும். அது தன்னைச் சீண்டுவாரையும்கூடப் பொறுத்துக்கொள்ளும். இன்னா கூறாது எதையும் நம்பும், எதையும் எதிர்நோக்கும், தன்னம்பிக்கையோடு இருக்கும்.

உலகம் கொண்ட எதுவுமே அழிந்து போகலாம், ஆனால் மனங் கொண்ட அன்பு என்றும் அழியாது. கவிஞன் சொல்வதுபோல அன்புகொண்ட "ஒருவன் இருந்தாலும் மறைந்தாலும் பெயர் சொல்லும், இவர் போல யார் என்று ஊர் சொல்லும்" நிச்சயமாக அந்தளவுக்கு அன்பு நம்மை வளமாக்கும்.

அன்பு ஆவியானவரின் நன்கொடை. மனுக்குலத்திற்கு ஓர் அற்புதக் கொடை. அன்பு கொண்ட உள்ளத்திற்கு உலகில் இல்லை தடை. வாழ்வில் நேர்மறையான மாற்றங்களைக் கொண்டுவர இந்தப் புதிய வருடத்தில் முனைந்து நிற்கின்ற இந்த வேளையில் இறைவனின் இனிய அருட்கொடையான அன்பை எம் உள்ளத்தில் நிறைத்து வளர்த்து பேணிக் காத்திட முன்வருவோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வறுமையைத் தா...

-யாழ். ராதவல்லி -

இறைவா!
என் சொந்த முயற்சியால் முன்னேற்றம்
காண உதவி செய்! - ஆனால்
அந்த முன்னேற்றத்தினால் செல்வம் வந்து
குவியாதபடி காத்துக்கொள்!
வறுமையை நான் பற்றாவிட்டாலும்
வறுமை என்னைப் பற்றிக் கொள்ளட்டும்...
என் வாழ்நாள் முழுவதும்...

"பணம் பெருகிவர
குணம் மாறிப்போகும்"
இது யதார்த்த உண்மை
இறைவா!
என் குணம் மாறிப் போகாதபடி
காத்துக்கொள்...

இறைவா!
வறுமையின் வலிய கரம்
என்னைத் தாக்கும் போது
குறுக்கு வழியில் செல்வம்
சேர்க்காது இருக்க அருள்செய்
ஆனால்,
என் வாழ்வுக்குத் தேவையான
செல்வத்தைத் தா!
அளவுக்கு மிஞ்சிய செல்வம் வேண்டாம்
என்னிடம் அளவுக்கு மிஞ்சிய
செல்வம் சேரும் போது அதனை
ஏழைகளுக்குப் பகிர்ந்து
கொடுக்கும் பரந்த மனத்தைத் தா!




"வறுமை போகும்
வறுமையில் பட்ட வடுப் போகாது"
என்று எம் முன்னோர் சொல்வர்
இறைவா!
வறுமை என்னைச் சாகடித்தாலும்
மற்றவரிடம் இரந்து வாழாதபடி
என் மனதைக் கடினப்படுத்து...

இறைவா!
வறுமை என் உயிரைப் பிரித்தால்
என் உழைப்பைச் சுரண்டியவரை
அதற்குப் பொறுப்புக் கூறவை
என் சாவின் மூலம்
பணக்கார வர்க்கத்திடம்
பகிர்ந்து வாழும் மனப்பக்குவத்தை ஏற்படுத்து
இறையே!
நீ இவற்றைத் தப்பாமல் செய்தல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# அனைத்து உயிரினப் பாதுகாப்பு ஆண்டு

**- ஐ.நா. அவை**

யிர்களை, உயிர்களை ஏன் பாதுகாக்க வேண்டும்? யாரிடமிருந்து பாதுகாக்க வேண்டும்? பூமியில் உயிர்கள் தோன்றி 350 கோடி ஆண்டுகளுக்குப் பின் ஆரம்பமாகித் தொடரும் விழிப்புணர்வு இது.

பழங்களைச் சேகரித்து, விலங்குகளை வேட்டையாடி உணவு தேடுபவர்களாக அறிமுகமாகி, இன்று அறிவுத் திறன் வளர்த்து வெற்றிகரமான உயிரினமாக மாறியுள்ளோம். படிப்படியாகக் கற்காலம், இரும்புக் காலம், செப்புக் காலம் என பல படிகளைத் தாண்டி இப்போதிருக்கும் நிலையை அடைந்துள்ளோம்.

நகரங்கள், பட்டணங்கள், அணைகள், கால்வாய்கள், சாலைகள், வயல்கள் உருவாகின. காடுகளை அழித்தோம். ஏரிகளையும் குளங்களையும் நிரப்பினோம். பூச்சிகளை விரட்டுவதற்காக பயிர்களில் நச்சைக் கவிழ்த்தோம். இது மட்டுமா? வாகனங்கள், விண்கலங்கள், தொழிற்சாலைகள், அணுவாயுதச் சோதனைகள் மூலம் நீர், நிலம், காற்றில் ஆபத்தான வேதிப் பொருட்களைக் கலந்தோம். இயற்கை உலகம் சுருங்க ஆரம்பித்தது, பின்வாங்கியது.

தொழிற்சாலை, வாகனப்புகை உட்பட பல்வேறு மாசுக்களால் பூமி வேகமாக வெப்பமயமாகி வருகிறது. இதனால் பருவநிலையில் மாற்றம் ஏற்பட்டு அனல்காற்று வீசுவதும் புயல், சூறாவளித் தாக்குதல், காட்டுத் தீ போன்ற இயற்கைப் பேரழிவுகள் ஏற்படுவதும் அதிகரித்துள்ளன. வெப்பமயத்தால் ஏற்படும் பின்விளைவுகளால் உலகளவில் இப்போது ஆண்டுக்கு மூன்று இலட்சம் பேர் இறப்பதாகவும், ஆண்டுக்கு 30 கோடி மக்கள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேநிலை நீடித்தால் 2030ம் ஆண்டுக்குப் பிறகு வெப்பமயத்தால் ஏற்படும் பேரழிவுகளால் இறப்போர் எண்ணிக்கை மேலும் அதிகரித்து அது ஆண்டுக்கு 5 இலட்சமாக உயரும். இம்மாற்றத்தால் உலகளவில் இப்போது ஆண்டுக்கு 18 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான பொருளாதார இழப்பு ஏற்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலை இப்படியே தொடர்ந்தால்...! உலகம் முழுவதும் பிற உயிரின வகைகள் அழிவுக்குள்ளாகி மனிதர்கள் மட்டுமே ஆங்காங்கே இருப்பார்கள். நாம் எங்கு சென்றாலும் வயல்கள், சாலைகள், கால்வாய்கள், தொழிற்சாலைகள், அணைகள் நிரம்பியிருக்கும்.

நாம் நாகரீகமடைந்தபோது ஏதோ ஒரு புள்ளியில் இயற்கையிடமிருந்து விலகி நாம் தனித்து வளர்ந்துவிட்டோம். ஒரு முக்கிய புள்ளியில் நாம் பூமியின் மேலாளர்கள் ஆகிவிட்டோம்.

## திருநீற்றுப் புதன் 17 - 02 - 2010

*மனந்திருந் துங்கள் வழியை மாற்றித்*
*தவஞ்செய் யுங்கள் தருணம் வந்தது!*
*கடவுளின் அரசு காத்திருக் கின்றது!*
*விரைவிலவ் வரசின் வெளிச்சத்தைக் காண்பீர்!*

**- இயேசுகாவியம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சந்ததிகள் வளம் காணும் கவிதை

நான்குசுவர் மத்தியிலே நானிருந்து பாட்டெழுத
நானிலத்தில் சித்தமில்லை பெண்ணே! - தினம்
வான்வெளியி லேபறந்து வளங்களினைக் கண்டுவந்து
வண்டமிழில் பாவடிக்க எண்ணம்
கூன்விழுந்து நரைவிழுந்து கூடவொரு தடிபிடித்து
குவலயத்தைச் சுற்றிவர மட்டும் - நான்
தேன்நிகர்த்த தமிழ்க்கவிதை தினந்தினமும் தான்தீட்டி
தேசத்துக்கு வழங்குகின்ற திட்டம்!

கானில்வளர் உயர்மரங்கள் கவின்மிகுந்த கடிமலர்கள்
கண்டு,புதுச் சிந்தனைகள் சுற்றும்! - எழில்
வானில்உலா வரும்நிலவை வரைகளினைக் காணுகையில்
வாகான கற்பனைகள் பற்றும்!
மானிடத்தை மதிக்காத மனங்களினை மேம்படுத்த
மாகவியென் மலர்க்கைகள் தட்டும்! - அதைத்
தேனினிய இலக்கியமாய் தேசமது புகழுகையில்
திறம்கண்டு மனம்மகிழ்வில் முட்டும்!

வால்பிடித்து வாழுகின்ற வாரிசுகள் தனைத்திருத்த
வையகத்தில் முயலுமெந்தன் பாட்டு! -நீதி
நூல்படித்தும் சாதிமுறை வாழ்வினிலே பேணுதலை
நொறுக்கவரும் கவிதைகளோ வேட்டு!
தாள்வணங்கித் தலைசரித்து அடிமையென வாழும்நிலை
தனைமுடக்கும் என்கவிதைப் பூட்டு! - புது
வாழ்வுபெறும் வருங்காலச் சந்ததிகள் மென்மேலும்
வளம்காணும் எ(இ)ன் கவிதை கேட்டு

● அ.கௌரிதாசன்

அத்த கைய காடுகள் அழிக்கப்பட்டு விட்டன. அந்த நிலையில் நாமும் இறந்துவிடுவோம். ஏனென்றால் நாம் மட்டும் தனியாக வாழ

ஆனால் நாம் வாழத் தேவையான உயிரின வகைகள் மிக அதிக அளவில் உள்ளன. அவை சிக்கலான வகையில் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. அதிக வகைகள் அழிந்தால் என்ன நடக்கும் என்பது கணிக்கமுடியாத ஒன்றாக உள்ளது. காடுகளில் உள்ள பல உயிர் காக்கும் மருந்துகள் நமக்குக் கிடைக்காமலே போகக்கூடும். அந்தத் தாவரங்கள் அழியும் நிலையில் உள்ளன.

முடியாது. ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் சொன்ன வார்த்தைகளைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். "இப்பூமி மிகவும் அழகான இரம்மியமான அமைதிப் பூங்காவாக மாறிவிடும் - மனிதன் மட்டும் இல்லாவிட்டால்" அர்த்தம் புரிகிறதா...?

**● நன்றி: வத்திக்கான் வானொலி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழ்ப்பாணம் என்னும் பெயர்ச்சொல்



இலங்கையின் வடபாகம் - குறிப்பாகக் குடாநாடு 15ம் நூற்றாண்டுக்கு முன்பு பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டது. மணிபல்லவம் (இதனை இன்றைய நயினாதீவு என்பார்), நாக நாடு (சிலப்பதிகாரம் - மங்கலவாழ்த்துப் பாடல்), நாகதுவீபம், மணற்றி, மணல்திடர் என்பன அவற்றுட் சிலவாகும்.

இன்று யாழ்ப்பாணக் குடாநாடு என்று அழைக்கப்படும் இந்தப் பழந்தமிழ் மண்ணிற்கு யாழ்ப்பாணம் என்ற பெயர் எப்படி வந்து சேர்ந்தது எனும் வினாவிற்கு அறிஞர் சிலர் பல்வேறு விளக்கங்களை அளித்துள்ளனர். அவற்றில் பன்மொழிப் புலவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் கருத்து இங்கு முதலில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

இடப்பெயர் சொற்பிறப்பு ஆய்வில் தம் வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவிட்ட சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் கி.பி. 13ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரியச் சக்கரவர்த்திகள் என்போர் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த இப்பழந்தமிழ் மண்ணை சிங்கள மக்கள் யாப்பா (நல்ல) பட்டுணா (ஊர்) என்று அழைத்ததாகக் குறிப்பிடுவர். சுவாமியவர்களின் கருத்துப்படி 'யாப்பா பட்டுணா' என்பதே யாழ்ப்பாணம் என்று மாற்றம் பெற்றது. (யாழ்ப்பாண வைபவ விமர்சனம் பார்க்குக)

ஆயினும், சுவாமி அவர்களைப்போல சொற்பிறப்பு ஆய்வில் சிறந்து விளங்கிய மற்றுமொரு கத்தோலிக்கத் தமிழ்த் துறவியான தாவீது அடிகளார் யாழ்ப்பாணம் என்னும் பெயர் தொடர்பாக சற்று மாறுபட்ட கருத்தை முன்வைப்பார்.

அடிகளாரின் கருத்துப்படி இலங்கை மக்களின் பண்டைய மொழியாகிய எழு (இதனைப் பழந்தமிழ் மொழி என்று குறிப்பிடும் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள், இம்மொழியுடன் பிராகிருதம், பாளி, வடமொழி ஆகிய மொழிகள் கலந்தமையால்தான் சிங்கள மொழி உருவானது என்பார். - ஈழத் தமிழர் - தொன்மை பக் 21) என்னும் சொல்லில் இருந்தே எழில், யாழ், அழகு ஆகிய சொற்கள் பிறந்தன. இவற்றில் யாழ் என்னும் சொல்லுக்கு அழகு என்று பொருள் கூறும் அடிகளார் சங்க இலக்கியங்களான குறுந்தொகை, கலித்தொகை ஆகிய நூல்களில் இச்சொல் பயின்று வருவதைச் சுட்டிக்காட்டி, அச்சொல்லினை (யாழ்) பிற்கால உரையாசிரியர்கள் 'அசைநிலை' எனக்கொண்டது பிழை என்றும், அதன் உண்மையான பொருள் அழகியவளே (அழகியவனே) என்றும் குறிப்பிடுவர். உரையாசிரியர்கள் விட்ட அதே தவறையே நன்னூல் ஆசிரியரும் செய்துள்ளார் என்பது அடிகளின் கருத்தாகும்.

தாவீதாரின் கருத்துப்படி யாழ் என்னும் சொல் சிங்களத்தில் யாளுவ (YAALUWA) என வழங்கப்படும். இதற்கமைய யாழ் நகர் என்பது யஹபத் பட்டினம் என ஆகி பின்னாளில் அது போர்த்துக்கேய மொழியில் JAFFNA PATAON என வழங்கப்பட்டது என்பார். யாழ்ப்பாணம் என்னும் பெயர்ச் சொல் மேற்படிச் சொல்லில் இருந்து பிறந்தது என்பது அடிகளாரின் கருத்தாகும்.

தமிழரும், தமிழ் அறிஞர்களுமான சுவாமி ஞானப்பிரகாசர், தாவீது அடிகளார் ஆகியோரின் கருத்துகளை முற்றிலும் மறுத்துரைக்கும் விதத்தில் D.G.A.பெரேரா என்னும் ஆய்வாளர் SUNDAY TIMES (10.01.1993) என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் யாழ்ப்பாணம் என்னும் சொல்லின் மூலங்களை அவரது சிந்தனைக்கேற்ப எடுத்துக்காட்டுவார். எனினும், அவரது ஆய்விற்கு முதலியார் திரு.சி.இராஜநாயகம் அவர்கள் எழுதிய பண்டைய யாழ்ப்பாணம் (1926) என்னும் நூலில் தம்பபண்ணியில் (TAMBAPANNI) அமைந்த புராதன நகரம் யாழ்ப்பாணம் (யாழ்ப்பாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வைபவ மாலையிலும் இச்செய்தி இடம்பெற்றுள்ளது) என்னும் செவிவழிச் செய்தியே ஆதாரமாக அமையலாயிற்று.

இச்செய்தியின்படி, தற்போது கீரிமலை என்று அழைக்கப்படும் கதிரமலையை அண்டிய பகுதியில் உள்ள ஒரு பாறையிலிருந்து கிளம்பும் நீரூற்று கடலில் சென்று கலக்கின்றது. இதனை அன்று கண்ணுற்ற கப்பலோட்டிகள் அங்கு வந்து நீர் அருந்திச் சென்றதாகக் குறிப்பிடும் திரு. பெரேரா, தம்பபண்ணி (TAMBAPANNI) என்னும் பாளிச் சொல்லின் மூலமாக விளங்குவது தாமரபர்ணி (TAMARAPARNI) என்னும் சமஸ்கிருதச் சொல் என்று சுட்டிக் காட்டுவார். இச்சொல் (தாமரபர்ணி) குடிப்பதற்குச் சிறந்த நீர் (தாமரா - நீர், பனியா - மிகச் சிறந்த) என்னும் பொருளுடையது என்பது அவரது கூற்றாகும்.

மத்திய காலத்தில் YAPA PATUNA என்று அழைக்கப்பட்ட இலங்கையின் வடபகுதி (குடாநாடு) போர்த்துக்கீச நாவில் JAFFNA PATAON என ஆயிற்று என்கிறார் ஆய்வாளர் பெரேரா. அவரது கருத்தின்படி JAHA என்னும் சிங்களச் சொல்லின் குறுக்கம் YA ஆகும் இதேபோல் PAN என்பது அம்மொழியில் குடிக்கும் நீரைக் குறிக்கும். சிங்களத்திலான இவ்விரு சொற்களும் இணைந்ததால் உருவான YAPANE என்னும் மற்றுமொரு சிங்களச் சொல் யாழ்ப்பாணம் என்று பொருள்படும்.

PA என்னும் பழைய சிங்களச் சொல், குடிக்கும் நீரைக் குறிக்கும் என்று கூறும் பெரேரா அவர்கள் PATUNA என்னும் சொல் சமஸ்கிருதச் சொல்லொன்றிலிருந்து பிறந்தது என்றும் அதற்குத் துறைமுகம் (PORT) என்றும் அர்த்தம் என்பர்.

யானபானம் (YANAPANAM) என்னும் சொல்லிலிருந்தே யாழ்ப்பாணம் என்னும் சொல் உருவானதாகக் காட்டும் பெரேரா, தம்பபண்ணி என்னும் சொல்லின் பொருளையே அச்சொற்கள் கொண்டுள்ளதாகக் கருதுகின்றார். அவரது கருத்தின்படி யானம் (ஆனம்) என்பது நாவாயையும், பானம் (PANAM) என்பது குடிக்கும் நீரையும் குறிக்கும். மேலே தரப்பட்ட இரண்டும் தமிழ்ச் சொற்களாயினும், அவை சமஸ்கிருத மூலத்தைக் கொண்டது என்பது அவரது ஆய்வின் முடிவாகும்.

'யாழ்ப்பாணம்' என்னும் பெயர்ச் சொல் பிறப்புத் தொடர்பாக அறிஞர் மூவரினதும் கருத்துகள் அவ்வாறு அமையினும், அச்சொல்



"என்ன இந்த மனுசி வளவளவென்று ஓயாமல் பேசிக்கொண்டேயிருக்கிறா?"

"தொலைக்காட்சியில் நேயர் நிகழ்ச்சி பார்த்திருப்பா போல"

• மணி

(யாழ்ப்பாணம்) இரண்டு பழந்தமிழ்ச் சொற்களின் (யாழ், பாணர்) இணைவு என்பதற்குச் சங்ககால இலக்கியங்களே தக்க சான்றாகும். எனினும் சங்ககாலத்திற்கு முந்திய தொல்காப்பியர் காலத்திலேயே (கி.மு 3ம் நூற்றாண்டு) பாணர், கூத்தர், விரலியர் என்னும் கலைஞர்கள் வாழ்ந்தமையை தொல்காப்பியம் (பொருளதிகாரம் - கற்பியல்) எடுத்துக் காட்டும்.

தமிழகத்தின் பழந்தமிழ் மக்களாகிய இவர்களில் பாணர் என்போர் இசைக் கலைஞர்களாவர். (பாண் - பண் அடியாகப் பிறந்த பெயர்) இசையையே தம் வாழ்வாகக் கொண்டிருந்த இக்கலைக் குடும்பத்தினரிடமிருந்து யாழ் என்னும் இசைக்கருவியை யாராலும் பிரித்துவைக்க முடியவில்லை. எனவேதான், பழந்தமிழ் இலக்கியங்கள் சீறியாழ்ப்பாணன் (புறம் 285), பாணன் கையது பண்புடை சீறியாழ் (நற்றிணை 30), நல்லியாழ்ப்பாணர் (சிலப்பதிகாரம் - வேட்டுவவரி) என்று இக்கலைக்குடும்பத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தின. இது போதாதென்று சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை எனும் பெயரில் இம்மக்களைப் பற்றிப் புலவர்கள் பாடல் இயற்றி மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இத்தகைய சிறப்புக்குரிய பாணர், இலங்கையில் குடியேறிய ஓர் இடமே இன்று யாழ்ப்பாணம் என்னும் பெயரைக் கொண்டுள்ளதாக நாம் கொள்ளவேண்டும். இது தொடர்பாக பேராசியர் மு.வரதராசன் அவர்கள் முன்வைத்துள்ள கருத்து இது.

தமிழகத்தில் பழங்குடி மக்களில் ஒரு வகுப்பினரான பாணர் - யாழ், குழல், முழவு ஆகிய இசைக் கருவிகளைக் கொண்டு பாடி இன்புற்ற கலைஞர்களாவர். இதன் பொருட்டு இவர்கள் 'யாழ்ப்பாணர்' என்றே அழைக்கப்பட்டனர். கி.மு. 5ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 9ம் நூற்றாண்டுவரை இசைக்கலையை வளர்க்கும் அரும்பணியில் ஈடுபட்டிருந்த யாழ்ப்பாணர்களை நினைவு கூரும் வகையில் தமிழ்நாட்டில் பல ஊர்கள் உண்டு. இலங்கையில் உள்ள யாழ்ப்பாணமும், அத்தகைய ஊர்களில் ஒன்றாகும். (பேராசிரியரின் தமிழ் இலக்கிய வரலாறு பார்க்குக)

அறிஞர் மு.வ.அவர்களின் இவ்வாழமான கருத்து, யாழ் மீட்டும் பாணர் இலங்கையில் குடியேறிய இடமே யாழ்ப்பாணம் என அழைக்கப்படலாயிற்று என்பதனை உறுதி செய்யும். எனவே, 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த அந்தகக்கவி வீரராகவனுக்கு அவனது இசைத் திறமையைப் பாராட்டி செங்கடகநகர் (இதனை சிங்கை நகர் என்பர் இன்றைய வரலாற்று ஆய்வாளர்) அரசன், தலைநகருக்கு (சிங்கை நகர்) வடக்கிலுள்ள மணற்றிடலைப் பரிசாக அளித்தான் என்னும் கதையை (யாழ்ப்பாண வைபவ மாலையில்) பாணர் குடியேற்றத்தின் ஓர் அடையாளமாகவே நாம் பார்க்கவேண்டும். ஏனெனில் அக்காலப்பகுதியில் (16ம், 17ம் நூற்றாண்டில்) யாழ்ப்பாணக் குடாநாடு, மக்கள் நிரம்பிய மானிலமாகவே விளங்கியமையை வரலாறு எடுத்துக் காட்டும்.

**- வாகரைவாணன் -**

## கடுகுக் கதை 22

## பார்வதி ஆச்சியும் உலகமயமாதலும்



பார்வதி ஆச்சி, அவுஸ்திரேலியாவில் இருந்து ஒரு மாதத்திலேயே திரும்பி வந்துவிட்டதையறிந்த அன்ரனுக்கு மிகவும் ஆச்சரியமாகிப்போய்விட்டது. ஆச்சியின் மகன் அவுஸ்திரேலியாவில் வசித்து வந்ததுடன் தனது தாயையும் கடந்த மாதம் அங்கு எடுத்து விட்டான். அன்ரன் ஆச்சியைப் பார்த்தான்.

"ஆச்சி ஏன் அவுஸ்திரேலியா பிடிக்கவில்லையா...?"

"நமக்கு அந்த ஊரு சரிப்பட்டு வராது தம்பி"

"ஏன்...?"

"மகன்ட பக்கத்துவீட்டுப் புள்ளக்கி பிறந்தநாள்... அண்ட அசல் எண்டு எட்டிப்பாத்தனான். பிறந்தநாள் கொண்டாடின அந்தச் சின்னப் பொடியன் ஒரு கரடி பொம்மையைக் காட்டி 'இது எண்ட மம்மிட போய் பிரண்ட் தந்தது' என்டான். கார் ஒன்டக் காட்டி 'டடாட கேள் பிரண்ட் தந்தது' என்டான். இதெல்லாம் நமக்குச் சரிப்பட்டுவராது மனே...!" என்றாள் ஆச்சி.

ஆச்சி இன்னும் உலகமயமாகவில்லை என்பது அன்ரனுக்குப் புரிந்தது.

**- பற்றி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**1096ம்** ஆண்டு முதல் 1270 வரை மேற்கு ஐரோப்பா, புனித பூமியை விடுவிக்க நடத்திய பல போர் முனைப்புகளுக்குக் கொடுக்கப்பட்ட பெயரே சிலுவைப் போராகும். இப்போரில் பங்குபற்றியவர்களின் உடையிலும் கவசத்திலும் சிலுவை வரையப்பட்டிருந்தபடியால் சிலுவைப் போர் என அழைக்கப்பட்டது. இராணுவப் படையெடுப்பு பலவாக இருந்தபோதிலும் வரலாற்று அறிஞர்கள் சிலுவைப் போர் எட்டு என வரையறுப்பர்.

# சிலுவைப் போர்

10வது நூற்றாண்டில் இஸ்லாமிய எழுச்சி ஐரோப்பாவை நோக்கி நகரத் தொடங்கியது. மத்திய கிழக்கிலும் வட ஆபிரிக்காவிலும் பல கிறீஸ்தவ மையங்கள் தம் கட்டுப்பாட்டை இழந்தன. திருத்தந்தை 2ம் ஊர்பன் அவர்கள் இதனை எதிர்கொள்ளக் கூடியிருந்தவர்களைத் தூண்டினார். அதற்கேற்ப

**1வது சிலுவைப் போர் 1095ம் ஆண்டிலிருந்து 1101ம் ஆண்டு வரையும்**

**2வது சிலுவைப் போர் 1145ம் ஆண்டிலிருந்து 1148ம் ஆண்டு வரையும்**

**3வது சிலுவைப் போர் 1188ம் ஆண்டிலிருந்து 1192ம் ஆண்டு வரையும்**

**4வது சிலுவைப் போர் 1207ம் ஆண்டிலிருந்து 1214ம் ஆண்டு வரையும்**

**5வது சிலுவைப் போர் 1217ம் ஆண்டிலிருந்து 1221ம் ஆண்டு வரையும்**

**6வது சிலுவைப் போர் 1228ம் ஆண்டிலிருந்து 1229ம் ஆண்டு வரையும்**

**7வது சிலுவைப் போர் 1248ம் ஆண்டிலிருந்து 1254ம் ஆண்டு வரையும்**

**8வது சிலுவைப் போர் 1267ம் ஆண்டிலிருந்து 1270ம் ஆண்டு வரையும் நடைபெற்றன.**

சிலுவைப் போர் பல காலம் நடந்தபடியாலும் பல்வேறு நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கில் வீரர்கள் பங்குபற்றியதாலும் பலஸ்தீனாவை கிறிஸ்தவ நாடாகப் பேணத் தவறியபோதும் ஐரோப்பாவிற்கும் மத்திய கிழற்கிற்கும் உருவான பண்பாட்டு எதிர்வினை பாரியது.

- **நன்றி: திருச்சபை வரலாற்றுத் துளிகள்**


## புதிய புத்தகம்

**ஜோசப்வாஸ் அடிகளாரின்**

பணிகள் - தாக்கம் - பண்டைய இலங்கைத் திருச்சபை வரலாறு

ஆசிரியர் அருட்சகோதரர் S.A.I. மத்தியு

மாணவருக்கு மிகவும் தேவையானதும், பயனுள்ளதுமான புத்தகம்.

பல புதிய வரலாற்றுத் தகவல்களைக் கொண்டது.

இது ஓர் ஆய்வு நூல்.

வரலாற்று ஆசிரியர்களுக்கு மிகவும் பயனுள்ளது.




**ஒரு நூலின் விலை 200/=**
(தபாற்செலவு உள்ளடக்கப்படவில்லை)

**நூல் பெறவேண்டிய முகவரி**
**159, S.S.J வேன்,**
**கல்முனை.**
**067 2229424**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுகதை

# சீர்திருத்தவாதி

● பைந்தமிழ்க்குமரன் டேவிட்

அன்னைபுரம் என்று பெயர் வைத்ததற்குப் பதிலாக சூனியபுரம் என்று சூட்டியிருக்கலாம். பல பணக்காரர்கள் அஞ்ஞாத வாசம் செய்யும் பகுதி. அந்தச் சந்தியில் வசதியான சாப்பாட்டுக்கடை, எதிரே உள்ளூர், வெளியூர் தொலைபேசி அழைப்புகளை வழங்கும் கொம்மியுனிகேசன் கடை, அந்தக் கண்ணாடி அறையில் உஜாலாச் சிரிப்புடன் இருக்கும் பத்தொன்பது வயதுச் சியாமளா. பாடசாலை மதிலோரக் குப்பைத் தொட்டி, ஆனால், உயர்ந்த வீடுகள். மொட்டை மாடியில் சின்னஞ்சிறு பூக்களைத் தெளித்தபடி கள்ளிச் செடிகள். கீழே தொங்கும் மெல்லிய கொடிகள். இவற்றைத் தாங்கிய மண் சாடிகள். இடதுபுறம் திரும்பினால் எதிரும் புதிருமாக பல கல்விக் கடைகள். வாரஇறுதி நாட்களில் கும்பல் கும்பலாக மாணவர்கள் படையெடுப்பது வழமையான நிகழ்வாகிவிட்டிருந்தது.



கனகசபை நடந்தார். உள்ளம் எரிமலையாய்க் குமுறிக்கொண்டிருந்தது. முத்துப் போல மூன்று பிள்ளைகளைப் பெற்றவர். மூத்தவள் வனிதா, அடுத்தவன் ரவிக்குமார், மூன்றாமவன் றெஜி.

“இந்தச் சுற்று வட்டாரத்திலயே பேசப்பர்ற உயந்த குடும்பம் என்ர குடும்பம். சாதியும் அப்பிடித்தான். படிச்ச பிள்ளைகள். தாய்வழியிலயும் பரம்பரப் பணக்காராக்கள். அதுவும் உடையார் பரம்பரை. அப்பிடிப்பட்ட குலத்தில பிறந்த இவன் அதுவும் என்ர மகன் அந்த... அந்த..ச்சே... சாதியில குறஞ்ச பெட்டையோட... ச்சேச்சே... இவன் என்ர ரெண்டாவது தறுதலை ரவி ஓடிப்பொயித்தானே..” தவித்தார் கனகசபை.

“பொட்டை நல்ல வடிவாம்... படிச்சவளாம்.. குணமானவளாம் எண்டு கேள்விப்பட்டனானப்பா..” என்றாள் அவரின் மனைவி.

கொதி உச்சந்தலைக்கு எகிறியது. “பொத்தடி வாய... என்ர மானம் மரியாத குடும்ப கவுரவம் அதோட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மூத்தவள் கலியாணம் கட்டாம வீட்டுக்க இரிக்காளேயெண்டதையெல்லாம் மறந்து இந்தச் சனியன் கழுவ ஏலாத கறைய உண்டுபண்ணிப் போட்டானேயப்பா... நான் என்ன செய்வன்.." மனம் அங்கலாய்த்தது. குமுறினார். அப்படியே கொட்டினார் நாகமணி ஐயாவிடம்.

நாகமணியென்ன சாதாரணமானவரா? உத்தியோகம் அதுவும் பிரதேசச் செயலாளராக இருந்து ஓய்வு பெற்றவர். குட்டுப்பட்டாலும் மோதிரம் அணிந்த கையால்தான் குட்டுப்படவேண்டும் என்று நினைப்பவர். செல்வாக்கான மனிதன் விடுவாரா, கனகசபையும் நாகமணியும் புறப்பட்டனர். ஓடாத ஓட்டமில்லை. போன சோடியப் பிடிக்க முடியவில்லை. இரவானது... கனகசபையின் மனைவி மூக்கைச் சிந்தியபடி

"எப்பிடியெல்லாம் வளத்தபுள்ள இப்பிடி தாய்தகப்பன கூடப் பிறந்ததுகள விட்டுப்போட்டு பாழாப்போன அந்தச் சனியனோட போயித்தானேயப்பா..." விம்மிக்கொண்டிருந்தாள்.

குட்டிபோட்ட பூனைபோல குறுக்கும் நெடுக்குமாக நடக்கிறார் கனகசபை. என்ன செய்யலாம் மனம் தவிலடிக்கிறது.

தொண்டையைச் செருமிக்கொண்டார் நாகமணி.

"என்னடா தம்பி இப்ப என்ன குடியா முழுகிப் போச்சி... கழுத கெட்டா குட்டிச் சுவரு. விட்டுத்தள்ளண்டா" என்றார்.

"அதில்ல நாகமணி நாளைக்கி இந்தச் சுத்துவட்டாரத்தில எப்பிடி முகம் காட்டுவன்... என்ர மானம் மரியாதை கவுரவம் என்னாகிறது" சுவரில் குத்தினார்.

குத்திய கையைத் தடவிக்கொண்டார். "விசயம் கேள்விப்பட்டது பகல் பதினொரு மணிக்கி. இந்தா இப்ப இரவு எட்டரை. இவ்வளவு நேரமா ஓடாத ஓட்டமில்ல... தேடாத இடமுமில்ல... என்ர கையில மட்டும் கிடைச்சிருந்தா உண்டு இல்லண்டு பண்ணியிருப்பன்... கூறுகெட்ட நாய்கள்"

"பொறுடாப்பா... ஏன் பதற்ற? கொஞ்சம் பொறு. இப்பிடியான நேரத்தில அவசரப்படக்கூடாது... நீங்க ரெண்டு பேரும் இரியுங்க. புள்ள வனிதா தம்பி ரெஜி இஞ்சால சாமியறப் பக்கமா கொஞ்சம் வாங்க. நான் கொஞ்சம் கதைக்கோணும். வாறயளா புள்ளயள்" என்றார்.

பத்து இருபது முப்பது நாற்பது என்று முக்கால் மணிநேரத்தைச் செலவழித்தார்.

"சரி புள்ளயள் ரெண்டுபேரும் போங்கோ நான் பாத்துக்கறன். நீங்க ஒண்டுக்கும் கவலப்படவேணாம் என்ன"

"எழும்புடா தம்பி கனகசபை, ஒரு கதையும் கதைக்கப்படாது... நான் சொல்லுற மாதிரிச் செய்யவேணும். அப்பத்தான் நீ சொல்ற மானம் மரியாத கவுரவம் கத்திப்புடி எல்லா மண்ணாங்கட்டியையும் காப்பாத்தலாம். டேய் கனகு உன்ர பொடியன் ரவி முந்தியிற்றான். மூத்தவள் வனிதா இண்டைக்கோ நாளைக்கோ ஓடப்போறாள். இளையவனுக்கும் கூட ஒரு லவ் இரிக்கி. கொஞ்சம் இறுக்கிப் புடிச்சியெண்டா இரிக்கிற இந்த ரெண்டும்கூடப் பறந்துவிடும். விளங்குதா" இது நாகமணி ஐயா.

"எ...என்ன..." அசந்துபோனார் கனகசபை.

"அவன் தானா ஓடல்ல... ஓட்டங்காட்டினது உன்ர மூத்தவள் வனிதாதான்ராப்பா..." இன்னும் அதிர்ந்தார் கனகசபை.

"என்ன... என்ன நாகமணி சொல்றா...?" நா தழுதழுத்தது.

"என்னத்தச் சொல்ல, உடையார் ஊட்டுப் பூனை மொட்டப் பறனில இருந்து முளிசிறமாதிரி நீங்க ரெண்டுபேரும் குடும்பம் நடத்தின சீத்துவம். கைக்குள்ள வச்சிப் பொத்திப் பொத்தி வளத்தியள். புள்ளயளக் கொஞ்சமெண்டாலும் சுதந்திரமா விட்டு காலத்துக்கேத்த மாதிரி



"தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகும்"

"அதத்தானே இப்ப நீதிமன்றங்கள் செய்யிது"

• மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சமூகமயமாக்கல்லயே. அவன் பொட்டையோட லவ்வு. அது எல்ல மீறிப் போயிற்றுது. வயித்தில புள்ள. அக்காக்காறியிற்றத்தான் சொல்லியிருக்கான். உன்னையும் உன்ர மனிசிக்காறியையும் நல்லாத் தெரிஞ்சவள் உன்ர மகள். அப்பா அம்மாவுக்குத் தெரியாம கூட்டித்துப் போய் குடும்பமா சந்தோசமா இரிடா தம்பியெண்டு உன்ர மகள்தான் அனுப்பியிருக்காள். போதுமா விளக்கம்..." வாயடைத்துப் போனார்.

"இப்ப உடனே நாம செய்யவேண்டியது ஓடினவன விட்டுப்போட்டு இதுகள் ரெண்டுபேரின்ர லவ்வையும் புறப்போசலா மாத்தவேணும். லவ்வெண்ட கதை வெளிய வரப்படாது" நிமிர்ந்தார் கனகசபை.

இருவரும் வெளியேறினர். ஒரே கிழமையில் சம்பிரதாயத்துக்கான சாதகக் கதைகளும், கொழுக்கட்டைப் பெட்டியும் முடிந்தன. கலியாண நாட்கள்கூடக் குறிக்கப்பட்டன.

"இனியெவன் பல்லில நாக்கப் போட்டுக் கதைக்கேலும்... கனகசபை பெரிய மனசுக்காரண்டா... காலத்துக்கேத்த சீர்திருத்தவாதிதான்ரா... சாதி சமயம் தராதரம் பாக்காம... தன்ர மூன்று பிள்ளயளுக்கும் கலியாணம் முடிச்ச மனிசன் எண்டுதான் கதைப்பாங்கள்..." நெஞ்சை நிமிர்த்திக்கொண்டார். வீறாப்பு முன்னரைவிட பல மடங்கு கூடியிருந்தது.

தெருவினர் அவரவர் வேலையை அவரவர் பார்த்துக்கொண்டனர். எவன் எவளோட போனா என்ன? அவரவர்க்கு அவரவர் கஸ்ரம். இதில கனகசபையின்ர கதையைக் கிண்ட நேரமா?

"உண்மையில நாகமணி, நீ மட்டும் சரியான நேரத்தில ஐடியா தராட்டி நான் என்ன செய்திருப்பன் எண்டு எனக்கே தெரியாது. இப்ப என்னய அசைக்கேலாது"

"ஓம் அண்ணன் நீங்க வந்து தலை குடுத்துத்தான் எங்கட கவுரவத்தக் காப்பாத்தினிங்க" கனகசபையின் மனைவி நன்றியுரை கூறினாள்.

"நீங்கெல்லாம் மாறவேமாட்டயள்" என்று நினைத்தபடி நாகமணி நடந்தார்.

# முள்வேலி

முள் வேலிக்குள்ளே
முல்லைத் தமிழ்மக்கள்
சொல்லொண்ணாத் துயரம்
சுகம் என்று கிட்டும்?

நம்பியிவர் வந்தார்
நன்கவர் ஏய்த்தார்
வெம்பி மனம் அழுவார்
வினை நீங்குமாமோ?

சுற்றிவர வேலி
சுதந்திரந் தான்ஏது?
பற்றி மனம் எரியும்
பாவம் என் செய்தார்?

முள் வேலிக்குள்ளே
முடங்கியுள்ள தமிழர்
உள்ளமது குமுறும்
உயிர்வாழ்தல் இதுவோ?

சொந்தமவர் கண்டு
சுகம் அறியத் தானும்
இந்த வேலி தடையாய்
இருப்பதுதான் கொடுமை

கழிவறையின் முன்னால்
கால் நோக நிற்பார்
இழிவிதைப் போல
இன்னு மொன்றுண்டோ?

ஆடு மாடு போல
அடைத்தவர் வைத்தார்
கேடு இதை இங்கே
கேட்க யார் உண்டு?

தாய் மண்ணை விட்டுத்
தானோடி வந்தார்
நாய்போல ஆனார்
நரகம் அவர் வாழ்க்கை

இன்னும் பல்லாண்டு
இவ் வேலிக்குள்ளே
என்னினம் இருக்கும்
இது என்ன நீதி?

• வாகரைவாணன் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## திருச்சபையின் முக்கிய தந்தையர்கள்

### புனித அகுஸ்தீனார் (354 - 430)

மேல்நாட்டுப் பிதாக்களில் முக்கியமானவராய் விளங்குபவர் புனித அகுஸ்தீனார் ஆவார். இவர் வட ஆபிரிக்காவில் உள்ள தகாஸ் என்னும் ஊரில் 354ல் பிறந்தார். இவருடைய தந்தை பற்றியுஸ். இவர் ஓர் அஞ்ஞானியும் ஒரு நிலப்பிரபுவும் அரசியல் வாதியுமாவார். அகுஸ்தீனாருடைய தாயார் புனித மொணிக்கம்மாள். தேவபயமும், பண்பும், பக்தியுமுள்ள ஒரு கிறிஸ்தவள். இவருடைய செபம், பரித்தியாகங்களினால் தன் கணவர் இறக்குமுன் அவரை திருமறையில் சேர்த்தாள். தன் மகனின் இடத்திலும் விசுவாசத்தை வளர்க்க அதிகம் பாடுபட்டாள்.

தன் சொந்த ஊரிலே கல்வி கற்ற அகுஸ்தீன் சிறுவயதிலே கேளிக்கைகளிலும் ஒழுக்கமற்ற வாழ்விலும் தன் இளமை நாட்களைச் சீரழித்தார். 380ல் உயர்படிப்புக்காக கல்வி கற்க கால்தேஜ் பட்டணம் சென்ற அகுஸ்தீன் சட்டப்படிப்பைத் துறந்து, கலைப் படிப்பில் ஆர்வம் காட்டினார். சிற்றின்பக் கேளிக்கைகள் நிறைந்திருந்த இப்பட்டினத்தில் பல்கலைக்கழகத்தில் ஒழுக்கமோ, அறநெறிகளோ எதுவும் கடைப்பிடிக்கப் படவில்லை. இவ்வித சூழ்நிலையில் வாழ்ந்த அகுஸ்தீன் சிற்றின்ப வாழ்க்கைக்குள் மூழ்கி, ஓர் இளம் பெண்ணை தனக்கு வைப்பாட்டியாய் வைத்து அவளுடன் பல ஆண்டுகள் வாழலானார். இதன் மூலம் இவர்களுக்கு "ஆடேயோடாற்றுஸ்" எனும் ஒரு மகனும் இருந்தான். 373ல் சிசரோவின் நூலொன்றைப் படித்ததையடுத்து அவருக்கு தத்துவ சாஸ்திரத்தில் பற்று ஏற்பட்டது. சிற்றின்பக் கேளிக்கைகளைத் துறந்து மனிக்கேயப் பேதகத்தின் மாணவனானார். 380ல் அதைக் கைவிட்டு உராமைக்குச் சென்று, இறுதியில் மிலானில் தங்கியிருந்தார். ஓர் ஆசிரியராய்க் கடமை புரிந்து, தத்துவப் படிப்புகள் மூலம் பலவகையான பேதகங்களுக்குள் இட்டுச் செல்லப் பட்டார்.

மிலானில் பேராயரான அம்புரோசியாரின் கடும் செல்வாக்கிற்கு ஆளானார். அகுஸ்தினுடைய வினாக்களுக்கும் சந்தேகங்களுக்கும் அம்புரோசியார் அளித்த பதில்கள் இவருக்கு திருப்தியளித்தன. கிறிஸ்தவத்தைப் படிக்க ஆசை கொண்டார். ஒரு நாள் "எடுத்துப் படி" எனும் குழந்தையின் குரல் கேட்டு வேதாகமத்தைத் திறந்து பார்த்தபோது பவுல் உரோமையருக்கு எழுதிய ஒரு பகுதியைப் படித்தார்.

அவருடைய வாழ்வும் மாற்றலானது. மனந்திரும்பிய இவர் பல மாதங்களாய்த் தியானங்கள் செய்தபின் அம்புரோசியாராலும், தாய் மொணிக்கம்மாளின் செபத்தினாலும் உறுதியான நல்ல தீர்மானங்களை எடுத்து 387ல் பெரிய சனி அன்று திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவராய் மாறினார். இதன் பின்னர் உலக ஆசாபாசங்கள் அனைத்தையும் துறந்து தாயுடன் ஆபிரிக்காவுக்குச் செல்ல ஆயத்தமானார். இவ்வேளையில் தாய் மரித்துப்போனதால், பின்பு இவர் தாகஸ்தாவிற்குச் சென்று அங்கு ஒரு துறவறக் குழுவினை ஆரம்பித்தார். 391ல் கிப்போ நகருக்குச் சென்றபொழுது மக்கள் கூட்டத்தார் அவரைச் சூழ்ந்து, கிப்போ ஆயர் வலேரியுசிடம் இட்டுச் சென்றார்கள். அங்கு அவர் குருவாய்த் திருநிலைப்படுத்தப்பட்டார். நான்கு ஆண்டுகளின் பின் இணை ஆயரானார். விரைவில் ஆயராகவும் நியமனம் பெற்று 395 தொடக்கம் 430 வரை பணி புரிந்தார்.

இவர் ஆயராய் இருந்த காலங்களில் மறையுரைகள் ஆற்றுவதும், மறைமாவட்டத்தினை நிர்வகிப்பதும், டொனற்றிசம், பெலாஜியனிசம், மனிக்கேயிசம் போன்ற பேதகர்களுடன் எதிர்த்து வாதாடுவதும் பலவகையான நூல்களினை எழுதுவதுமே முக்கிய பணியாய் இருந்தது.

பிரபல்ய எழுத்தாளரான அகுஸ்தீன் 113 நூல்களையும், 218 திருமுகங்களையும், 500க்கும் மேற்பட்ட மறையுரையையும் எழுதியுள்ளார். புனித அகுஸ்தினாருடைய இறையியலிலும், தேவபக்தியிலும் ஒப்பிடக்கூடியவர் புனித பவுல் ஒருவரே என்பது மறைநூல் வல்லுனர் கருத்தாகும்.

இவரின் நூல்களிலே "வாழ்க்கை அறிக்கை", "இறைவனின் நகரம்" என்பன முக்கியமானவையாகும். வாழ்க்கை அறிக்கை என்னும் நூலில் அவரின் முன்னைய பாவ வாழ்க்கையும், அதிலிருந்து மீண்டு தூய வாழ்வு வாழ்ந்தமையும் குறிப்பிடப்பட்டிருந்தது. இவர் எழுதிய மற்றைய நூலான இறைவனின் நகரம் இன்றும் மாபெரும் கிறிஸ்தவ உலக இலக்கியமாகக் கருதப்பட்டு, மேல்நிலைப் படிப்பிற்குப் பாடநூலாய்த் திகழ்கிறது. மேலும், இவையே அகுஸ்தீனாருடைய தத்துவ, இறையியல், அரசியல் சிந்தனைகளின் சாராம்சமாகும். இந்நூலின் முதலாம் பகுதி அஞ்ஞானம் தவறு என்பதை எண்பிக்க, இரண்டாம் பகுதி கிறிஸ்தவக் கோட்பாடுகளைத் தெளிவுபடுத்துகிறது. இறைபராமரிப்பே வரலாற்றுக்கு வழிகாட்டி என்றும், புனிதரின் வாழ்வில் தாயாரின் செபமும் அம்புரோசியாரின் போதனைகளும் மிகவும் சிறப்பிடம் பெறுகிறது என்றும், இத்தகையவரையே இறைவன் தமக்கெனத் தேர்ந்து கொள்கிறார் என்பதையும் அறியமுடிகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## குப்புறப் படுத்துச் செய்யும் ஆசனங்கள்

### புஜங்காசனம்

நிலை - 2



### செய்முறை

- விரிப்பின் மீது குப்புறப்படுத்து கைகளைத் தலைக்கு மேலே நேராக நீட்டி, கால்களை ஒன்று சேர்த்துவைக்கவும்.
- நாடியைத் தரையின் மீது வைத்து இரண்டு உள்ளங்கைகளையும் மார்பின் அருகே கொண்டு வரவும்.
- முன்பாதம் தரையில் படுமாறு பாதங்கள் இரண்டும் இணைந்திருக்கட்டும்.
- உள்ளங்கைகளைப் பூமியில் அழுத்தி, மெதுவாக தலையை நிமிர்த்தி பின் மார்பையும் உயர்த்தவும்.
- சுவாசத்தை இழுத்தபடி முதுகை நன்றாக வளைத்து முகம் வானத்தைப் பார்த்தபடி சுவாசத்தை மெதுவாக விடவேண்டும்.
- இப்பொழுது உங்கள் உடல் பாரம் முழுவதும் உள்ளங்கைகளிலும், முன்பாதத்திலும் இருக்கவேண்டும்.
- 10 முதல் 20 வினாடிவரை ஆசனநிலையில் இருக்கலாம்.
- மெதுவாக உடலை ஆரம்பநிலைக்குக் கொணர்ந்து ஓய்வு எடுக்கவும்.
- இதுபோல் மூன்றுமுறை செய்தால் போதுமானது.

### இதனால் ஏற்படும் பலன்கள்

- உடலில் நோய் எதிர்ப்பு சக்தி கூடுகிறது.
- வயிற்றின் தசைகள் இறுக்கப்படுவதால் இரத்த ஓட்டம் சீராகும்.
- கைகளுக்கு நல்ல பலத்தைக் கொடுப்பதோடு முதுகெலும்பை உறுதியாகவும் அழகாகவும் வைத்திருக்கும்.
- பெண்களுக்கு இந்த ஆசனம் நல்ல பலனைத் தருகின்றது. மார்பு விரிந்து நுரையீரல் பலமடையும்.
- உளவியல் ரீதியில் தன்னம்பிக்கையைக் கொடுக்கின்றது.

### தீரும் நோய்கள்

- கூன் முதுகு, முதுகுவலி, இடுப்புவலி, கழுத்துவலி போன்ற கோளாறுகளைச் சரிசெய்கின்றது.
- உடல் எடை தொந்தி குறையும் அத்துடன் மலச்சிக்கல் கோளாறும் தீரும்.
- பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப்பைக் கோளாறு, மாதவிடாய் தள்ளிப்போதல் அல்லது முன்பே வருதல் மற்றும் மாதவிடாயின்போது வயிற்றுவலி, வெள்ளை படுதல் போன்ற நோய்கள் போன்ற நோய்கள் மறையும்.
- ஆஷ்துமா, நீரிழிவு போன்ற நோய்களை சரி செய்கின்றது.
- தொடர்ந்து முயற்சி செய்தால் பாரிசவாதக் கோளாறுகளைச் சரி செய்யலாம்.

### குறிப்பு

- அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்கள் செய்தல் ஆகாது.

### மாற்று ஆசனங்கள்

- பிறையாசனம்
- பாதஹஸ்தாசனம்

**மேலதிக ஆலோசனை பெற 0776282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.**

ஆசிரியர்
M. Nesaraj
Yoga Therapist & Counsellar (India)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தேம்பாவணி நூலடக்கப் பொது ஆராய்வு

# மூன்று கிறித்தவ தமிழ் இலக்கிய நூல்களின் நூலாராய்வு 06

இத்தாலித் திருநாடு பயந்த தமிழ் முனிவரென தமிழறிஞர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களால் விதந்துரை செய்யப்பட்ட வீரமாமுனிவர் தமிழகத்திற்கு வந்ததும் ஒரு தமிழனாகவே, உடை, உணவு, உறையுள், பழக்கவழக்கங்கள், பயிலும் மொழி ஆதிய யாவற்றிலும் தனை மாற்றிக்கொண்டார் என முன்னர் கண்டோம். அவரது உள்ளத்தில் கத்தோலிக்க மத உணர்வுகள் நிறைந்திருந்தாலும் தமிழரிடை நிலவிய கடவுள் நம்பிக்கை, பஞ்சமாபாவத்திற்கு அஞ்சுதல் ஆகிய மதத்தத்துவங்கள் அவரைக் கவர்ந்தன. அதனால் அவர் தமிழகம் வந்த நோக்கம் எளிதில் கைகூடத்தக்க நிலை உள்ளதைக் கண்டார். அத்துடன் அவரைக் கவர்ந்த தமிழ்மொழியின் அழகு தமிழர்பால் மட்டல்ல மொழியிலும் அதிக நாட்டத்தை ஏற்படுத்தியது.

இதனால், அவர் வந்த நோக்கத்திலும் பார்க்கத் தமிழ் மொழிக்குத் தன்னாலியன்ற பணி செய்வதில் அதிக நாட்டங் கொண்டார். அதற்காக அதிக நேரத்தைச் செலவிட்டார். அத்தகைய நிலையில் முனிவரின் செயற்பாடு திருவிளையாடற் புராணத்தில் பரி வாங்கச் சென்ற வாதவூரடிகள் சிவபெருமானின் அன்பால் கட்டுண்டு மன்னன் கொடுத்த பொன்னைச் சிவத்திருப்பணிக்குச் செலவிட்டதுபோல அமைந்தது. தமிழ் மொழியின்பால் கொண்ட அளவற்ற ஈடுபாட்டால் தனது நேரத்தில் பெரும் பங்கை அதற்காகச் செலவிட்டார். ஆயின் தான் அங்கு வந்த முதல் நோக்கத்தை மறந்தாரில்லை.

கத்தோலிக்க மதப்பரப்புதலுக்கு தான் பெற்ற தமிழின்பத்தைப் பயன்படுத்தினார். பல இடங்களில் தன் சொல் வன்மையாலும் வாழ்க்கை நெறியாலும் மக்களின் மனதில் இடம்பெற்றார். அதனால் பல திருச்சபைகளைத் தாபித்து ஆலயங்களை அமைத்தார். வழிபாட்டிற்கான பாடல்கள், பனுவல்களைத் தமிழில் செய்தார். விக்கிரக ஆராதனையை விரும்பும் தமிழரிடை சிலைகளை நிறுவும் பழக்கத்தை ஏற்படுத்தினார்.

கடவுளை அம்மை அப்பனாகக் கொள்ளுந் தமிழர் மனதில் கன்னி மரியாளை, மாதா வடிவில் இடம்பெறச் செய்தார். குழந்தை இயேசுவை ஏந்திய அடைக்கல மாதாவின் உருவம் போன்றவற்றால் அவர்களிடையே இயேசுநாதரின் இரட்சிப்பை ஊட்டினார். இவ்வண்ணம் அவர் செய்த சமயப் பணிகள் அளவற்றன. அவற்றின் தொகுப்பை இந்த நூலின் அவரது வரலாற்றுக் குறிப்பின்கண் காணலாம்.



• மணி

ஓர் இலக்கியம் அல்லது அந்த இலக்கியத்தின் படைப்பாளியின் தரம் எத்தகையது என மதிப்பாய்வு செய்வதற்குப் பல வழிகள் கையாளப் படுகின்றன. அவைகளிற் சிறந்த வழியெனக் கருதப்படுவது அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நூலின் தகவல்களையோ, அதன் படைப்பாளியைப் பற்றிய விபரங்களையோ இலக்கிய வரலாற்று நூல்களில் இடம்பெறச் செய்வதே என ஆன்றோர் துணிவர். இவ்வகையில் தேம்பாவணி என்னும் நூலும் அதன் ஆசிரியர் வீரமாமுனிவரது பெயரும் பல இலக்கிய வரலாற்று நூல்களில் எடுத்தாளப்பட்டுள்ளன.

அவ்வாறானவற்றுள் சில இலக்கிய வரலாற்று நூல் அட்டவணை ஒன்றை அடியிற் தருகிறேன்.

**01. கிறிஸ்தவமுந் தமிழும் - மயிலை சீனி வேங்கடசாமிக் கழகப் பதிப்பு 1936, 1971**

**02. கிறித்தவத் தமிழ்த் தொண்டர்கள் - சுப்பிரமணியப் பிள்ளை 1947**

**03. தமிழ்ப் பணி - ஆ. குருசாமி, தமிழ்நாடு நூற் பதிப்புக் கழகம், இலிங்காயத்தூர் தெரு, உறையூர், திருச்சி 1960**

**04. தமிழ் மறுமலர்ச்சி - சே.ச.பிரான்சிஸ் முராயிஸ், அமுதநிலையம் பிரைவேட் லிட், தேனாம்பேட்டை, சென்னை 61**

**05. கிறித்தவத் தமிழ்த் தொண்டர்கள் - ரம்போலா மாஸ்கரேன்ஸ், தமிழ் இலக்கியக் கழகம் 1972**

2009ம் ஆண்டின் வசந்தகால இலக்கிய நூலாரய்வுத் தொடரிற் கிறிஸ்தவ செய்யுள் இலக்கியங்களாக விளங்கும் ஏழு நூல்களையிட்டு ஆராய்வு செய்ய முற்பட்டபோது அவற்றில் இத்தகைய தகுதிகள் கொண்ட இலக்கிய நூல்கள் எவை என்பதில் தடுமாறவேண்டி இருந்தது. எனவே இவை பற்றிப் பல கிறித்தவத் தமிழ் அறிஞர்களிடம் ஆலோசனை கேட்டபோது இரட்சணிய அம்மானை பாமர இலக்கியப் பகுதியிலும், இயேசு காவியம் கிறித்தவ பக்தி அனுபவம் இல்லாத ஒருவரால் படைக்கப்பட்டதாலும் இயேசு மகா காவியம் சில வருடங்களுக்கு முன்னரே செய்யப்பட்ட ஒரு நூலாக இருப்பதாலும் அவற்றைத் தவிர்த்து மேற்படி இலக்கணங்களுக்கு அமைவான நான்கு நூல்களையே இப்போது ஆய்வு செய்ய எடுத்துள்ளோம்.

தேம்பாவணிக் காப்பியம் கிறித்தவ மத உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கோடு இத்தாலி மொழியில் படைக்கப்பட்ட ஒரு காவியத்தின் தமிழாக்கம் என்பதை முன்னர் கண்டோம். அது இயேசுவின் வரலாற்றை முழுமையாகக் கூறும் நூலன்று. இயேசுவை வளர்த்த சூசை என்பாரின் வரலாற்றுடன் இயேசுக் கிறிஸ்துவின் வரலாற்றையும் கிறித்தவ மத உற்பத்தியின் ஆரம்ப அடிப்படைத் தத்துவங்களையும் பிணைத்துக் கூறும் போக்குடையது. பின்வரும் தேம்பாவணியின் கதைச்சுருக்கத்தால் அறிந்துகொள்ளலாம்.

மோசே என்னும் கடவுளடியானுக்கு அருளிய பத்துக் கற்பனைகளின்படி வாழமுடியாத மக்கள், பிதா மாதா ஆதாம் ஏவாள் முன் செய்த மீறுதல்களின் வழியே வாழத் தொடங்கினர். தம் மக்கள் பசாசின் கெடுமதிகளில் இருந்து விலகி தெய்வீக வாழ்க்கையை நடத்த வேண்டுமென்ற இறைவன் அவர்களது பாவங்களைத் தாமே சுமந்து அதன் பயங்கரங்களை உணர்த்தவும் அவர்களைப் பாவத்திலிருந்து இரட்சிக்கவும் உலகிற்கு மனித வடிவத்தில் வந்தார். மக்களோடு மக்களாக வாழ்ந்தார். தன் போதனைகளை அவர்களிடம் பரப்பி அவற்றிற்கு முன்மாதிரிகையாக வாழ்ந்து, சிலுவையில் மரித்தார். உலகில் இறைசக்தியால் மட்டும் இயலுமான சாவை வெல்லும் உயிர்த்தெழுதலைச் செய்து தன்னை வெளிப்படுத்தினார். இன்று உலகின் பல பாகங்களிலும் அதிக மக்களால் கைக்கொள்ளப்படும் கிறித்தவ மதம் அவரது உபதேசங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.

தொடரும்....



## குறும்(புப்)பா - 31

தேர்தல்களி யாட்டமெல்லாம் போச்சு

தேர்தலினால் ஊர்குழம்பி யாச்சு

ஆர்வந்து ஆசனத்தில் அமர்ந்தாலும் அடித்தட்டு

மக்களுக்கு இழுக்குதம்மா மூச்சு

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media






இம்முறை தொண்டனின் சில நிமிடங்களுக்காக தன்னாமுனை மியானி நகரில் அமைந்துள்ள சொமஸ்கன் சபையினைச் சேர்ந்த அருட்பணி. ஹிருதய ராஜூ அடிகளாரைச் சந்தித்தோம். நாம் அவரைச் சந்திக்கச் சென்ற வேளை பிற்பகல் 5 மணியிருக்கும். அவ்வேளையில் அவர் பிள்ளைகளுடன் விளையாட்டுடையில் விளையாடிக்கொண்டிருந்தார். எம்மைக் கண்டதும் எம்முடன் கலந்துரையாட உடம்பில் வழிந்த வியர்வையைத் துடைத்தவாறு வந்தார். கையில் சொமஸ்கன் சபையினரைப் பற்றிய சிறு புத்தகம்.

**✽ வணக்கம்! அருட்தந்தையவர்களே!**

☀ வணக்கம்! வாருங்கள்!!

**✽ தந்தையவர்களே உங்களைப் பற்றிச் சற்றுக் கூறுங்கள்...**

☀ என்னைப் பற்றிச் சொல்லப் பெரிதாக எதுவுமில்லை. நான் இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தவன். தெலுங்கு எனது தாய்மொழி. எனது தகப்பனார் ஒரு விவசாயி. என்னுடன் சேர்த்து நாங்கள் நான்கு ஆண்பிள்ளைகள். தீவிரமான இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள். எனினும் பதின்மூன்று வயதில் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டேன். 1995ம் ஆண்டு குருமடத்தில் இணைந்து கொண்டேன். பின்னர் 2005ம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டேன். 2006 ஜூலை மாதம் தன்னாமுனைக்கு வந்தேன். தற்போது எனது குடும்பத்தினர் அனைவரும் கத்தோலிக்கர்கள்.

**✽ நீங்கள் ஏன் குருத்துவ வாழ்வைத் தெரிவு செய்து கொண்டீர்கள்? அதிலும் குறிப்பாக சொமஸ்கன் சபையை!**

☀ நான் சிறுவயதில் மறைமாவட்டக் குருக்களின் மாணவர் விடுதியில் தங்கித்தான் படித்தேன். அப்போது இருந்தே குருக்களின் அர்ப்பணிப்பான பணியால் கவரப்பட்டேன். அருட்சகோதரி இம்மானுவல் என்பவரின் தன்னலமற்ற சேவை என்னை ஈர்த்தது. அதுமுதலே குருவாகவேண்டும் என ஆசைப்பட்டேன். இந்தியாவில் சொமஸ்கன் சபைத் துறவிகளின் செயற்பாடுகள் என்னைக் கவர்ந்தன. வீதிச் சிறுவர்களின் பராமரிப்பிலும் சேரிப் புறங்களில் சேவை செய்வதிலும் அவர்கள் தங்களை அர்ப்பணித்திருந்தார்கள். எனவேதான் சொமஸ்கன் சபையில் இணைந்து கொண்டேன்.

**✽ உங்கள் சொமஸ்கன் சபையினரைப் பற்றிச் சற்றுக் கூறுங்கள்.**

☀ புனித ஜெரோம் எமிலியானி (St. Jerome Emiliani) என்னும் பொதுநிலையினர் ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டதுதான் சொமஸ்கன் சபை. புனித எமிலியானி அவர்கள் யுத்த வீரனாகப் பணியாற்றி எதிரிகளால் சிறைப்பிடிக்கப்பட்டு பின்னர் விடுதலையானவர். தேவதாயாரின் மீது அளவற்ற பக்தி கொண்டவர். வடஇத்தாலியில் உள்ள சொமஸ்கன் என்னுமிடத்தில் இச்சபை ஆரம்பிக்கப்பட்டது. இப்புனிதர் சிறுவர்களினதும், தேவையுள்ள இளைஞர்களினதும் பாதுகாவலர் என அழைக்கப்படுகின்றார். தற்போது உலகம் பூராகவும் 500க்கும் மேற்பட்ட குருக்களைக் கொண்ட சபையாக இது காணப்படுகின்றது.

**✽ இலங்கையில் இச்சபையானது எங்கெங்கு பணி புரிகின்றது?**

☀ கண்டியில் பத்து வருடங்களுக்கு மேலாக சொமஸ்கன் சபை இயங்கிவருகிறது. சுனாமியின் பின்னர் திருமலை - மட்டுநகர் ஆயர் கலாநிதி ஜோசப் கிங்ஸ்லி ஆண்டகையின் ஆலோசனைப்படி தன்னாமுனையிலும் இயங்கிவருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**அப்படியானால் தன்னா முனையில் உங்கள் பணிகள் பற்றிக் கூறுங்கள்...**

இங்கு நானும் இன்னும் சில அருட்சகோதரர்களும் (இவர்களில் ஒருவர் விரைவில் குருப்பட்டம் பெறவுள்ளார்) மேலும் சொமஸ்கன் சபை அருட்சகோதரிகளும் பணிபுரிகின்றோம். யுத்தத்தினாலும் போரினாலும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக நாம் சேவை புரிகின்றோம். சுமார் 160 சிறுவர், சிறுமிகள் எம்மிடமுள்ளனர். அவர்களில் 44 பேர் எம்முடனேயே தங்கியுள்ளனர். மொத்தச் சிறார்களில் முப்பது பேர் தாய் அல்லது தந்தையை இழந்தவர்கள். 15 பேர் இருவரையும் இழந்தவர்கள். அவர்களின் உடல், உள, ஆன்மீக விருத்திக்காக நாம் பாடுபடுகின்றோம். இவர்கள் பாடசாலை செல்கிறார்கள். கிறிஸ்தவ மாணவர்கள் மறைக்கல்விக்குச் செல்வார்கள். இந்துமாணவர்களை அறநெறிப் பாடசாலைகளுக்கு அனுப்புகிறோம்.

**இப்பிள்ளைகள் எத்தனை வயதுவரை உங்களுடன் இருப்பார்கள்?**

அவர்கள் வளர்ந்து தங்கள் கால்களில் தாங்களே நின்று, சமூகவாழ்க்கைக்கு ஆயத்தமாகும் வரை அவர்களை நாம் பராமரிப்போம்.

**அவர்களின் விளையாட்டுத் துறை தொடர்பாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

தினசரி மாலையில் விளையாட்டுப் பயிற்சிகள் இடம்பெறுகின்றன. அவர்களை நாம் பயிற்றுவிக்கின்றோம். கரப்பந்தாட்ட மைதானம், கிறிக்கட் மைதானம் உட்பட பல்வேறு விளையாட்டுகளுக்கும் தேவையான மைதானங்கள் உள்ளன. தற்போது கூடைப் பந்தாட்ட மைதானம் அமைத்து வருகின்றோம். ஏனெனில் உள வளர்ச்சிக்கு உடல் ஆரோக்கியம் அவசியம். கரப்பந்தாட்டத்தில் நான் மாவட்டச் சம்பியன். இது தவிர வேறு விளையாட்டுகளிலும் ஈடுபாடு உடையவன் என்பதால் அவர்களுக்குப் பயிற்சியளிப்பதில் எவ்வித கஷ்டமும் இல்லை.

**மியானி தொழிற்பயிற்சி நிறுவனம் பற்றி...**

இங்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கணினிப் பிரயோகம், கணினி வன்பொருள், மின்சார வெதுப்பகம் என்பனவற்றில் பயிற்சிகள் வழங்கி வருகின்றோம். தற்போது நவீனரக சவர்க்கார உற்பத்திப் பயிற்சி நெறிக்கான கட்டிட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. (இத்தாலியில் இதற்கென ஒருவர் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்) பயிற்சிநெறிகள் இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்டு NVQ சான்றிதழ் பெற்றவை. வேலை வாய்ப்புகள் அதிகம் சாத்தியம். இது தவிர ஆடை தயாரிப்பதில் பெண்களுக்குப் பயிற்சியளிக்கின்றோம். விரைவில் அழகுக் கலைப் பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ளோம்.

**இங்குள்ள அருட்சகோதரிகளின் பணிகள் பற்றிக் கூறுங்கள்...**

பெண் பிள்ளைகளைப் பராமரிப்பதும், இங்கு அமைந்துள்ள வைத்தியசாலைப் பொறுப்பும் அவர்களுடையது. தாதியப் பயிற்சி பெற்ற அருட்சகோதரிகள் உள்ளார்கள். (இவ்வேளை நோய்வாய்ப்பட்ட ஒருவருக்கு அவசர சிகிச்சையளிப்பதற்காக அருட்சகோதரியொருவரை வாகனமொன்றில் ஏற்றிச் செல்வதைக் காண்கிறோம்)

**பிள்ளைகளுடன் உங்கள் பணி பற்றி என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

பிள்ளைகளுடன் பழகுவது மிகவும் அனுபவபூர்வமானது. அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது ஏராளம். பொறுமை, அன்பு, என்பன வற்றில் அவர்கள் நல்ல முன்னுதாரணங்கள். அவர்கள் இறைவனின் கொடைகள்.

தொண்டனின் சார்பில் நன்றி கூறி விடை பெற்றுக்கொண்டோம்.

*சுமார் 43 ஏக்கர் நிலப்பரப்பில் இச்சபையின் செயற்பாடுகள் காணப்படுகின்றன. பிள்ளைகள் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபடும்போது அவர்களுக்கான சப்பாத்து உட்பட பூரண விளையாட்டுடைகள் வழங்கப்படுகின்றன. அழகான கட்டிட அமைப்புகள், பூந்தோட்டங்கள், வயல்கள் என்பன மனதைக் கொள்ளை கொள்கின்றன. திருமண வரவேற்பு மண்டபம்கூட உண்டு.*

*ஆத்ம திருப்தியுடன் வெளியேறுகின்றோம்.*

**- ஆழியோன் -**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறுநீரகங்களின் தொழிற்பாடும் செயலிழப்பும்




நம் உடலில் உள்ள முக்கிய உறுப்புகளுள் ஒன்று சிறுநீரகங்களாகும். உடலின் பக்கங்களுக்கு ஒன்றாக முதுகின் உட்புறமாகவும் உடலின் கீழ்ப்பக்கமுள்ள விலா எலும்புகளுக்கு உட்புறமாகவும் இவை அமைந்துள்ளன. அவரை விதை வடிவிலான இவை 8.10cm நீளமும் 4.5cm அகலமும் கொண்டவை. சிறுநீரகங்கள் ஐந்து முக்கிய தொழில்களைப் புரிகின்றன.

## மருத்துவம்



**01. உடற்கழிவுகளை அகற்றல் எ-டு: யூரியா, கிரியாற்றினைன்**

**02. ஓமோன்களின் மூலம் குருதியமுக்கத்தைச் சீராக்குதல்**

**03. கல்சியம், பொஸ்பேற்று சமநிலையைப் பேணுவதன் மூலம் எலும்புகளின் உறுதித்தன்மையைப் பேணுதல்.**

**04. செங்குருதிச் சிறுதுணிக்கைகளின் ஆக்கத்திற்கான ஓமோன்களை உற்பத்தி செய்வதன் மூலம் குருதிச் சோகையிலிருந்து** (Anaemia) **பாதுகாத்தல்.**

**05. உடலிலுள்ள மேலதிக நீரை அகற்றுதல்.**


இவ்வாறு உடல் ஆரோக்கியத்துக்குத் தேவையான முக்கிய தொழில்களை ஆற்றும் சிறுநீரகங்கள் பல்வேறு காரணங்களால் செயலிழக்கலாம். சிறுநீரகங்களின் தொழிற்பாடு இல்லாமல் உடலில் உருவாகும் கழிவுப் பொருட்களை வெளியேற்ற முடியாது. வெளியேறாது கழிவுப் பொருட்கள் உடலில் தேங்கும்போது இரத்தம் நச்சுத்தன்மை அடைவதோடு உடலியக்கம் பலவகையிலும் பாதிக்கப்பட்டு உயிராபத்து ஏற்படலாம்.

சிறுநீரகங்கள் தொழிற்பாட்டை இழப்பதற்கான காரணங்கள்

- **சிறுநீரக அழற்சி** (Nephritis)
- **நீரிழிவு** (Diabetes)
- **உயர் குருதி அமுக்கம்** (Hybertension)
- **நீண்டகாலத் தொற்று** (Chronic Infection)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



- சிறுநீரகக் கல் (Kidney stone)
- நச்சுப் பொருட்கள் (Toxins)
- பரம்பரைக் காரணிகள் (Genetics)
- மருந்து வகைகள் (Medicines)
- அளவுக்கு மீறிய பாலுறவுப் பழக்கங்கள்

## சிறுநீரகச் செயலிழப்பு இருவகைப்படும்

01. சடுதியாக சிறுநீரகத் தொழிற்பாடு தடைப்படுதல் (ARF) - பெரும்பாலும் மீளக்கூடியது.
எ-டு: பாம்புக்கடி, செப்டிசீமியா, குருதியிழப்பு, உடலிலிருந்து அதிக நீரிழப்பு, வயிற்றோட்டம் மற்றும் கடுமையான வாந்தி என்பவற்றின்போது.

02. நாட்பட்ட, தொடர்ச்சியான, மீளமுடியாத சிறுநீரகச் செயலிழப்பு (CRF)
எ-டு: உயர்குருதி அமுக்கம்,நீரிழிவு, நாட்பட்ட சிறுநீரக அழற்சி, Poly Cystic Kidney Disease, மாத்திரைகள் (Drugs-NSAID)

– இன்னும் வரும்....

• தொகுப்பு: சித்தன்




பொய் புரட்டு பழையதாக
மெய் சத்யம் புதியதாக

சண்டை சச்சரவு பழையதாக
சமாதானம் சமத்துவம் புதியதாக

கோபம் அவதி பழையதாக
மன்னிப்பு பொறுமை புதியதாக

எடுத்தல் பறித்தல் பழையதாக
கொடுத்தல் பகிர்தல் புதியதாக

சாத்திரம் சூனியம் பழையதாக
செபம் தவம் புதியதாக

பழைய ஆண்டில் பழையதைக் கழித்து
புதிய ஆண்டில் புதியதைப் புதுக்கி
புத்துணர்ச்சி பெற்றவனாய்
நான் வாழ வரம் வேண்டும்

*ரஜனி ஈஸ்வரன்*



"டொக்டர் நீங்க எடுக்கிற எக்ஸ்றே படத்த நான் வீட்டுக்குக் கொண்டு போகலாமா?"

"அது எதுக்கு உனக்கு ?"

"கிரஹணம் வரும்போது பாக்கத்தான் டொக்டர்"

• மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கலைஞர்கள் உலகில் அழகின் பாதுகாவலர்கள் - திருத்தந்தை



அழகின் பாதுகாவலர்களாகிய கலைஞர்கள் அந்த அழகை, அழகின் வழியாகவும் அழகிலும் வெளிப்படுத்துவதற்குத் தாங்கள் கொண்டுள்ள பொறுப்பை உணர்ந்து செயல்படுமாறு உலகக் கலைஞர்களுக்கு அழைப்பு விடுத்தார் திருத்தந்தை 16ம் பெனடிக்ற்.

ஓவியம், சிற்பம், இசை, இயல், நாடகம் எனப் பற்பல கலைத்துறைகளில் சிறந்துவிளங்கும் இந்தியா உள்ளிட்ட 260 பன்னாட்டுக் கலைஞர்களை வத்திக்கான் சிஸ்டீன் சிற்றாலயத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை, கலை உலகோடு கத்தோலிக்கத் திருச்சபை கொண்டுள்ள நட்பைப் புதுப்பிப்பதாக இச்சந்திப்பு இருக்கின்றது என்றார்.

கலைஞர்கள், உலகில் அழகின் பாதுகாவலர்கள் என்றுரைத்த அவர், அழகின் மேன்மையையும் அதை மனித சமுதாயத்திற்கு வெளிப்படுத்துவதில் கலைஞர்கள் கொண்டுள்ள பொறுப்பையும் கோடிட்டுக் காட்டினார். கலைஞர்கள் தங்களின் கலைகள் வழியாக மானுடத்திற்கு நம்பிக்கையின் சான்றுகளாகவும் அதனை அறிவிப்பவர்களாகவும் இருக்கவேண்டுமென்றும் அவர் கூறினார்.

## பதில் (காதில் விழுந்த கதையொன்று)

அந்த வகுப்பினுள் நுழைந்த மேலதிகாரி தன் அதிபுத்திசாலித்தனத்தைக் காட்டவேண்டுமே. "ஸ்ருடன்ஸ் நானொரு கணக்குக் கேப்பன். சரியா பதில் சொல்ற முதல் ஆளுக்கு இந்தா இந்த நூறு ரூபா உடனடிப் பரிசு" என்று நூறு ரூபாவை மேசையில் வைத்தார். முழு வகுப்பும் அலட்டாகிவிட்டது. "எக்ஸ் என்னும் ஊரிலிருந்து ஒரு பஸ் வை எனும் ஊருக்கு பத்துப் பேரோடு போகுது. முதலாவது ஊரில ஆறுபேர் ஏற மூணுபேர் இறங்க பஸ் ஓடுது. அடுத்த ஊரில ரெண்டு பேர் இறங்க மூணு பேர் ஏறினாங்க பஸ் ஓடுது. அடுத்த ஊரில ஏழுபேர் ஏற மூணுபேர் இறங்கினாங்க. பஸ் இப்ப வை எனும் ஊருக்குப் போயிற்றுது என்றால் என்னுடைய வயதென்ன? கறெக்ராச் சொல்லுங்க பாப்பம்" என்றார். மாணவர்கள் விழித்தனர். ஒருவன் நாற்பது என்றான். மற்றொருவன் ஐம்பத்தேழு என்றான். ஒரு பிள்ளை அவருக்கு ஐஸ் வைக்க நினைத்து இருபத்தாறு சேர் என்றாள். பல விடைகள் கூறினர். தலை ஆட்டிக்கொண்டே வந்தவர் அவன் எழுந்து "சேர் உங்களுக்கு அம்பது வயதுசேர்" என்றவுடன் ஆச்சரியப்பட்டு "சரியான விடை... மிகச் சரியான விடை.. பிறில்லியன்ற் ஸ்ருடன்ற் இந்தா நூறு ரூபா" என்றபடியே நூறு



ரூபாவைக் கொடுத்தார். "அதுசரி எப்பிடிக் கறெக்ரா என்ட வயசக் கண்டுபிடிச்சா?" என்று கேட்டார். "சேர் எங்கட வீட்டுக்குப் பக்கத்தில ஒரு அண்ணன் திரியுறான். அவனுக்கு இருபத்தஞ்சி வயது. அவன் ஒரு அரைப் பயித்தியம் சேர். அப்பிடியென்டா உங்களுக்கு அம்பது வயதுதானே சேர்" என்றான். அதிகம் அதிகமாக அசடுவழிய வெளியேறினார்.

**- பைந்தமிழ்குமரன் டேவிட் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முதலில் நல்ல மனிதராகுங்கள்

அன்று அமெரிக்காவை ஆட்சி செய்த அமெரிக்க ஜனாதிபதியான, ஆபிரகாம் லிங்கன் தனது மகன் கல்வி பயின்ற பாடசாலை அதிபருக்கு ஒரு மடல் வரைந்தாராம்.

**“ஐயா, எனது மகனை நீங்கள் வைத்தியராக்க வேண்டியதில்லை, எனது மகனை நீங்கள் பொறியியலாளர் ஆக்க வேண்டியதில்லை, எனது மகனை நீங்கள் கணக்காளர் ஆக்கவும் வேண்டாம்...”** மடலைப் படித்துக்கொண்டிருந்த அதிபர் நினைத்தார் அப்போ தன்னைப் போல அமெரிக்க ஜனாதிபதியாக வர, அரசியல்வாதி ஆக்கச் சொல்கிறாரோ...! மேற்கொண்டு மடலை வாசிக்கிறார்.

**“எனது மகனை அரசியல்வாதியாகவும் உருவாக்கவேண்டாம்”** அப்படியானால் இவர் என்னதான் என்னிடம் கேட்கிறார்...? **“ஐயா! எனது மகனை ஆளுமையுள்ள, சமூக ஏற்புடைய நல்ல பிரஜையாக்குங்கள். அது எனக்குப் போதும். பிறரை மதிக்கக் கற்றுக்கொடுங்கள். பிறரை நேசிக்கவும், உதவி செய்யவும், வாழ்த்தவும் கற்றுக் கொடுங்கள்”** இதுதான் அமெரிக்க ஜனாதிபதியின் கோரிக்கை.



வெறும் நூலறிவால் மனிதன் தலைக்கனமடைகிறான். அறிவுடன் திறனும் நல்ல மனப்பாங்கும் வேண்டும்.

ஒரு மகள் தனது தாயுடன் இன்றைய காலகட்டத்தில் உரையாடும் விதம்: மகளுடைய பிள்ளை அழுகிறது... அதற்காக அவள் தனது தாயைப் பார்த்து “உனக்குப் புள்ளய அழாமப் பாக்கத் தெரியாதா..? வேற என்ன நீ இங்க வெட்டிக் கிழிக்கிறா..” அந்தத் தாய் பிள்ளை அழும் காரணத்தை விளக்க வாயெடுத்தபோது, அவளது மகள் “மூடு வாய... நீ கதைக்காத... சாப்பாட்டுப் பீங்கான் முகறைக்கு வரும்..” ஆவேசமாக அதட்டுகிறாள். இதுதான் இன்றைய சமூகம் உருவாக்கப்படும் விதம். நல்ல மனப்பாங்கு பெரிதும் கவனிக்கப்படாது புறக்கணிக்கவே படுகிறது. அதுமட்டுமல்ல, யாருக்கு முன்னால், யாருடன் என்ன பேசுகிறோம்? எனும் உணர்வே கிடையாது.

அந்தத் தாயிடம் இருந்து அந்தப் பிள்ளையும் அதைக் கற்றுக்கொள்கிறது. அது வளர்ந்தபின்பு தனது தாயையும் இவ்வாறுதான் தரக்குறைவாகப் பேசப்போகிறது. பாடசாலையிலும் இப்பிள்ளை ஏனைய பிள்ளைகளைத் தரக்குறைவாகப் பேசிச் சீரழிக்கவும் போகிறது.

எனவே, பெற்றோர் தமது பிள்ளைகளை வைத்தியர், பொறியலாளராக்க முன்பு நல்ல மனப்பாங்குள்ள சமூக ஏற்புடைய

வயவைச் சந்திரசேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பிரஜைகளாக மாற்ற வேண்டும். தகாத வார்த்தைகளை சிறார் முன்பு பிரயோகிப்பதை கூடிய பாகம் தவிர்க்க வேண்டும்.

பிள்ளைகளை அடிக்கடி அடித்துத் துன்புறுத்தி மிரட்டும்போது அவர்களுக்கு உங்கள்மீது பாசமோ, நேசமோ ஏற்பட வாய்ப்பில்லை. குரோத மனப்பான்மையே வளரும். அவர்கள் வளர வளர அதுவும் வளரும். நீங்கள் வயோதிபராகும் போது பழிவாங்குணர் வாக மாறி உங்கள் பிள்ளைகளால் நீங்கள் நிச்சயம் பழிவாங்கப்படுவீர்கள். சிறுவயதில் அவர்கள் உணர்ச்சி வெளிப்பாடுகளுக்குக் களம் அமைத்துக் கொடுங்கள். விளையாடுவதற்கும், கவின் கலைகளை இரசிக்கவும் பங்குபற்றவும் அதாவது பாடவும், ஆடவும் சித்திரம் வரையவும், நடிக்கவும் அவர்களுக்கு சந்தர்ப்பம் வாங்கிக் கொடுத்து ஊக்குவியுங்கள். இல்லாதவிடத்து தாழ்வுச் சிக்கலில் உங்கள் பிள்ளைகள் தத்தளித்து தன்னிறைவு அடையாமல் போகலாம்.

எனவே, பிள்ளைகள் முன் ஆவேசமாக ஆர்ப்பரிப்பதை விட்டுவிட்டு அடக்கமான அணுகுமுறையைக் கையாளுங்கள். உங்கள் மீது உங்கள் பிள்ளைகள் கருணை கொள்வார்கள். "அரசன் எவ்வழியோ குடிமக்களும் அவ்வழியே" உங்கள் பிள்ளைகளுக்கு நீங்களே முதல் வழிகாட்டிகள். உங்கள் நடத்தைகளே அவர்களுக்கு முதல் பாடம். எனவே, நல்லதைச் செய்யுங்கள். உங்கள் பிள்ளைகளும் நல்லவர்களாவார்கள்.



# குருக்களுக்கு முதல் நன்றி

மாணவரை என்றும் செம்மையாக்கி
மனிதர்களை என்றும் வாழவைக்கும்
மன்னிக்கும் மனம்கொண்டு மறவாமல்
பலி செய்யும் குருக்களுக்கு முதல் நன்றி

சமூகத்தின் குறைகளை இனம் கண்டு
சாதிமத பேதங்களையும் இனம் கண்டு
சரியாக விடைகாணும் குருக்களுக்கு
சலிக்காமல் முதல் நன்றி செய்திடுவோம்

உற்றார் உறவினரை விட்டு விட்டு
உறவாட உம்முடன் இணைந்துவிட்ட
ஊழியம் செய்யத் தயக்கமின்றி
உருவாகிய குருக்களுக்கு முதல் நன்றி

இறைவார்த்தைகளை இயம்பிட
இறைவனோடு என்றும் கலந்துவிட்ட
இயல்பினை எடுத்து இயம்புகின்ற
இனியநல் குருக்களுக்கு முதல் நன்றி

சுகுணா அன்ரன்



## குறும்(புப்)பா - 32

என்னோடு ஏனிந்த வாதம்?
எதற்காக இந்தப்பிடி வாதம்?
பண்ணோடு நீபாட பக்கத்தில் வருவேனோ
நான்சக்தி சுப்பர்ஸ்டார் சுருதி

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## தமிழ்நடை

'பண்டித நடேச சாஸ்திரி' என்பவர் எழுதிய 'திராவிட நாட்டுக் கதைகள்' என்னும் சிறுகதைத் தொகுதியொன்று அண்மையில் வாசிக்கக் கிடைத்தது. இதனை 'சிரஞ்சீவி' என்பவர் தொகுத்து எழுதியிருந்தார். முதலாம் பதிப்பு 1958 ஏப்பிரல் மாதம் வெளியிடப்பட்டிருந்தது. ஐந்தாம் பதிப்பு 1997 செப்டம்பரில் வெளிவந்துள்ளது. முப்பத்தேழு கதைகள் இப்புத்தகத்தில் அடங்கியிருந்தன. அக்கால எழுத்துநடைகள் வாசிக்கும்போது இரசிக்கக்கூடியதாய் இருந்தன. முதலில் முன்னுரையை அப்படியே தருகின்றோம்.

**மூலவர் கூறினார்...**

கதைகளும் ஒருவித சாஸ்திரம்தான். அவைகளைப் படிப்பதன் மூலமாக, அவைகள் எத்தேசத்தில் வழங்கி வருகின்றனவோ அத்தேசத்தின் நடை, உடை, பாவனை, நாகரிகம், வித்தை முதலானவற்றை அறியக்கூடும் என்று பல தேச நிபுணர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். படிப்பற்று புத்தியீனர்களாகத் திரிந்த இராஜகுமாரர்களை அரசாளும் திறமைக்கு சோமசன்மா என்னும் விஷ்ணுசன்மா கதைசொல்லி அல்லவா கொண்டுவந்தார்!

நமது நாட்டில் காஷ்மீரத்தில் ஸ்ரீ ஹர்ஷன் என்ற ஒரு பேரரசன் 800 வருடங்களுக்கு முன்பு ஆண்டுவந்தார். அவர் யுத்தத்தில் மாளவே, தாயாகிய சூரியவதி புத்திர சோகத்தால் சகிக்கமாட்டாத துக்க சாகரத்தில் மூழ்கினாள். அவள் மனக்கவலையை மாற்றுவதற்காகவே சோமதேவர் கதாசரிச் சாகரம் (கதைக்கடல்) என்ற நூலை எழுதினார். இவற்றைக் கொண்டு நானிங்கு சொல்லத் துணிவது என்னவென்றால் கதைகளால் மற்ற சாஸ்திரங்களைப்போல் அறிவைப் பரப்பச் செய்யமுடியும் என்பது நமது மூதாதைகளால் வெகுநாளைக்கு முன்பே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதேயாகும். மேலும், கிலேசம் அல்லது துக்கம் அடைந்திருக்கும் மனதை களிப்பிக்கின்ற தன்மை கதைகளுக்கு அதிகமாய் உண்டு. எந்தக் குழந்தையும் தான் முதன்முதலாகக் கற்கும் வித்தை கதையாகவே இருக்கின்றது. 'கதை சொல்லு' என்று எத்தனை குழந்தைகள் நம்மைக் கேட்டிருக்கின்றன என்பதை ஒவ்வொருவரும் யோசித்துப்பார்த்தால் இதன் உண்மை வெளிவரும்.

**"கதையைச் சொல்லுவது வெகு ஆனந்தமே. அதே மாதிரி கதையைக் கேட்பதும் ஓர் ஆனந்தமான வேலை"**


**- நடேச சாஸ்திரி**

அக்காலத் தமிழில் எழுதப்பட்ட அற்புதமான முன்னுரை. இக்கால எழுத்துநடையில் அனேகமான ஆங்கிலச் சொற்களும் கலந்து விடுகின்றன. தென்னிந்தியாவில், ஆங்கிலமும் தமிழ்ச் சொற்களாகவே கருதப்படும் ஒரு காலகட்டத்தில்தான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

சுஜாதா அவர்கள் தனது கதைகளில் இன்னொரு விதமாக ஆங்கிலத்தைக் கலந்தார்.

"அவன் கமராவை எடுத்து கிளிக்கினான்" என்றவாறுதான் அவரின் எழுத்துநடை இருந்தது.

இவ்வகையில் இலங்கையின் எழுத்துநடை சற்று நிம்மதிதான். அதிகம் எழுதினாலும் வாசிப்பதற்கு நேரமில்லை. விரைவு உணவு (Fast Food) போல சற்றுக் குறுகிய நேரத்திற்குள் வாசிக்க மக்கள் விரும்புகின்றார்கள். உலகம் விரைவானதாய் மாறிவிட்டது நாமும் மாறத்தான் வேண்டும்.



"உங்களுக்கு எக்ஸ்றே படம் எடுக்கவேண்டும்"

"படம் எடுக்கிறதுதான் எடுக்கிறிங்க அதைக் கலரில எடுக்கப்படாதா?"

• மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாய்ச்சொல்லின் வீரர்கள்

● அருட்பணி N.C. அருள்வரதன்

போரின் கோரநிலைகள் முடியவே
புறப்பட்ட காட்சிகளோ பற்பல
வேரறுந்த மரங்களென எங்குமே
வீழ்ந்துவிட்ட வாழ்வுகள்தான் எத்தனையோ
ஊனங்களாகிவிட்ட உடல்களுடன்
உருக்குலைந்து நிலையழிந்த வாழ்வுகளும்
போருக்குள் புதைந்து எழும்போது இந்த
புரியாத உருவங்கள் தெரியவரும்

முடிந்து எங்கோ மறைந்துகொண்ட போரின் கதை
முழுவதுமே எவருக்குமே தெரியாமலே
அடிபாட்டின் துயரத்தின் நிலைகளுக்குள்ளே
அடைபட்டுக் கிடக்கும் அடிமைவாழ்வு
முடிவுக்கு வரும்நாளைத் தேடி ஏங்கி
வெளியாகும் வேதனையின் வெளிப்பாடுகள்
முடியாத தொடர்கதையாய் நகர்ந்து சென்று
முடியாமல் இன்னுமது தொடர்கிறதே

அடிபட்ட காயங்கள் ஆறாதவேளை
ஆறாத துயர்நிலையே காட்சிகளாம்
முள்வேலிக் கம்பிக்குள் அடைபட்டு
முகப்பொலிவு அற்றதொரு வாழ்வங்கு
இத்தனை தொல்லைகளின் இடைநடுவே
வாக்குறுதி வழங்கிவரும் நேரமுமாம்
எத்தனையோ தேர்தல்களில் சொன்னதுபோல்
இப்போதும் அதனையே சொன்னார்கள்

வெற்றியைக் கண்டுவிடத் தேர்தலிலே
வெளிவந்த வார்த்தைகள்தான் எத்தனையோ
சொன்னபடி வார்த்தைகளோ நிறைவேறினால்
சொர்க்கமென நமது பூமி திகழ்ந்திடுமே
சொல்வது கடினமில்லை எவருக்குமே
சொன்னதைச் செய்துவிட்டால் சாதனைதான்
சாதனைகள் படைத்தவரோ யாருமில்லை
சரித்திரமே உண்டு இதன் உண்மை சொல்ல

# அரசன் (அரசு) கலங்கரை விளக்கு

திருவள்ளுவர் என்ற ஞானி, தற்கால அரசுகளை - தமக்குத் தெரிந்த அரசர்களை - அரசுகளை இனங்கண்டார். அங்கு பெருங் குறைபாடுகளைக் கண்டார். மேலும் தமிழ்நாட்டில், மயிலாப்பூர் சென்னையில் வாழ்ந்த இவர், தம் நூலில் அவருக்கு முற்பட்ட இலக்கிய, அரசியல் குறிப்பாக சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பற்றியோ, குறுநிலக் கிழார்கள் (சிறு அரசு உடைமையாளர்கள்) பற்றியோ யாதும் வெளிப்படையாகக் கூறவில்லை. ஆனால், அக்கால அரசர் - அரசு பற்றிய நிலையைக் கண்டு கலங்கி எவரையும் சாடாமல் நல்லதோர் அரசுக்கு வழி காட்டுகிறார்.

**அரசு என்ற அரசியல் பகுதியை ஆழ்ந்து படிக்கும்போது:**



அரசு பொருள் ஈட்டவேண்டும்
வருவாயைக் கூட்டவேண்டும்
நல்லாட்சி - நல்ல அரசியல் யாப்பு
யாவரையும் சமமாக எண்ணி அவர் வாழ அரசியலைத் தொடக்குகிறார்
எவரையும் சாடாது, குறை களைந்து
நிறை காணும் 'அரசு' யாப்புதான்
வள்ளுவரின் அரசியல்

இக்கால மனித உரிமைச் சாசனங்கள் அதிகாரப் பிரிவு, நீதித்துறை பற்றியெல்லாம் வள்ளுவர் கூறியுள்ளார்.

● அருட்சகோதரர் எஸ்.ஏ.ஜ. மத்தியு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி 15-03-2010

'பரிசுப் போட்டி'

# விவிலியம் கற்போம் - 84

(எண்ணிக்கை 19:1–22)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

ஆண்டவர் மோசேயிடமும் ஆரோனிடமும் "ஆண்டவர் கட்டளையிட்ட சட்டவிதிமுறை இதுவே; பழுதற்ற செங்கிடாரி ஒன்றை உன்னிடம் கொண்டு வரும்படி மக்களிடம் சொல்; அது குறையற்றதும் ஒருபோதும் நுகம் சுமக்காததுமாய் இருக்கட்டும். அதை நீ குரு ...................................... கொடுப்பாய்; அது பாளையத்துக்கு வெளியே எடுத்துச்செல்லப்பட்டு அவன் முன் அடிக்கப்படும்; அவன் தன் விரலினால் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து சந்திப்புக்கூடாரத்திற்கு முன்புறம் ...................................... தெளிப்பான். அக்கிடாரியின் தோல், தசை, இரத்தம் ஆகியவை சாணியுடன் சுட்டெரிக்கப்படும்; அப்போது குரு கேதுருக்கட்டை, ஈசோப்பு, கருஞ்சிவப்பு நூல் ஆகியவற்றை எடுத்து எரிக்கப்படும் கிடாரி மேல் போடுவான். பின் குரு தன் ...................................... துவைத்துக் குளிப்பான். பின் அவன் பாளையத்தினுள் வர வேண்டும்; அந்த மாலைவரை அவன் தீட்டுப்பட்டவனாயிருப்பான். கிடாரியைச் சுட்டெரிப்பவனும் அவ்வாறே செய்வான். தீட்டுப்படாத ஒருவன் கிடாரியின் ...................................... கூட்டி பாளையத்துக்கு வெளியே ஒரு தூய்மையான இடத்தில் கொட்டி வைப்பான்; அது தீட்டகற்றும் தண்ணீருக்காக வைக்கப்படும்; அது பாவ நீக்கத்திற்குப் பயன்படும். சாம்பலை கூட்டுகிறவன் உடைகளைத் துவைப்பான்; ...................................... பிணத்தைத் தொடுபவன் ஏழு நாள்களுக்குத் தீட்டுப்பட்டிருப்பான். மூன்றாம், ஏழாம் நாள்களில் தண்ணீரால் தன்னைத் தூய்மைப் படுத்துவான்; இவ்வாறு செய்யாதவன் இஸ்ரயேலிடமிருந்து விலக்கப்பட வேண்டும்; ஏனெனில் ...................................... தண்ணீர் அவன் மேல் ஊற்றப்படவில்லை. கூடாரத்தில் ஒரு மனிதன் இறக்கும் போது இதுவே சட்டம். அத்துடன் இறுக மூடப்படாமல் திறந்திருக்கும் பாத்திரம் எதுவும் தீட்டுப்பட்டதாகும். திறந்த வெளியில் வாளால் கொல்லப்பட்டவனையோ, தானாகச் செத்தவனையோ, மனித எலும்பையோ, ...................................... தொட்டால் ஏழு நாள்கள் தீட்டுப்பட்டவனாயிருப்பான். தீட்டுப்பட்டிருப்போருக்காக நெருப்பாலான பாவம் போக்கும் பலியின் சாம்பலில் கொஞ்சம் எடுத்து ஒரு பாத்திரத்தில் ஊற்று நீரை முகந்து அதில் சாம்பலை இடுவர்; ...................................... ஒருவன் ஈசோப்பைத் தண்ணீரில் தோய்த்து அனைத்தின்மீதும் தெளிக்கவேண்டும். தூய்மைப்படுத்தியவன் உடைகளைத் துவைத்துக் குளிப்பான்; மாலையில் தூய்மையாவான். இவ்வாறு தன்னைத் தூய்மைப்படுத்தாதவன் ...................................... விலக்கப்படுவான். தீட்டுக் கழிக்கும் தண்ணீரைத் தெளிப்பவன் தன் உடைகளைத் துவைக்க வேண்டும்; மாலை வரை இவன் தீட்டுப்பட்டவனாயிருப்பான். அவன் தொடுவதெல்லாம் ...................................... இருக்கும்; அப்படித் தொடுபவன் எவனும் மாலைவரை தீட்டுப்பட்டவனாயிருப்பான்.

**விடைகள் :** **மனித, கல்லறையையோ, தீட்டுப்பட்டதாகவே, சபையிலிருந்து, தூய்மையாயிருக்கும், சாம்பலை, எலயாசரிடம், உடைகளை, தீட்டுக்கழிக்கும், ஏழுமுறை**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் - 84

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. உலகில் அதிகம் கத்தோலிக்கர் வாழும் நாடு
(இத்தாலி, பிரான்ஸ், பிலிப்பைன்ஸ்)

2. இராமாயணத்தை இயற்றிய வால்மீகியின் இயற்பெயர்
(இரத்தினாகரன், கம்பர், காளமேகம்)

3. பறவைக் காய்ச்சல் முதலில் பரவிய நாடு
(சீனா, வியட்நாம், அமெரிக்கா)

4. செல்போனின் தந்தை இவர்
(எட்வின், மார்ட்டீன் கூப்பர், தோமஸ் அல்வா எடிசன்)

5. "வீட்டுக்கு வந்த விருந்து" என்பதில் விருந்து என்பது
(உவமையாகு பெயர், பண்பாகு பெயர், தானியாகு பெயர்)

6. கோயில் பூனை ................................................................................
(சாமியைச் சுற்றும், பிரசாதம் உண்ணும், தேவனை மதியாது)

பெயர் : ................................................................................................

முகவரி : ................................................................................................

................................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 84
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media








## விவிலியம் கற்போம் - 82 விடைகள்

குருத்துவம், கூடாரத்தின், இஸ்ரயேல், புதல்வரின், படையல்களில், குற்றநீக்க, உயர்தர, கருப்பை, செக்கேல், கிராம்

## அறிவை வளர்ப்போம் - 82 விடைகள்

1) பாரதிதாசன் 2) 1972 3) சரவணமுத்து அரங்கு
4) சீனா 5) சிறக்கப் போ 6) இரட்டைக்கிளவி

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதியவர் எவரும் இல்லை**

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- சு.பிரியங்கா
  இல:15, 4ம் குறுக்கு
  திருச்செந்தூர் வீதி
  கல்லடி, மட்டக்களப்பு
- ம.கி.றொஷானி கொறெயிரா
  191, டொக்கியார்ட் வீதி
  திருகோணமலை

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 34 முடிவுகள்**

- **முதலாம் பரிசு - 300/=**
  கிஷான்.பி
  64, யாட்அடை வீதி
  திருகோணமலை
- **இரண்டாம் பரிசு - 200/=**
  S.சாதனா
  கிறிஸ்ரி இல்லம்
  பிரதான வீதி
  தம்பிலுவில்
- **3ம் பரிசு - 100/=**
  ர.ரஜிவனி
  11ம் குறுக்கு
  விமானநிலைய வீதி
  திருப்பெருந்துறை
  மட்டக்களப்பு

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தவக்காலத்தில் ஆன்மீகப் புதுப்பித்தலுக்கு
# அழைப்பு விடுக்கும்
# ஹிங்குரான கல்வாரித் திருத்தலம்



**காலம்: 05.03.2010**
**நேரம்: காலை 9.30**
**இடம்: ஹிங்குரான கல்வாரித் திருத்தலம்**



நிகழ்வுகள்: சிலுவைப்பாதைத் தியானம், திருப்பலி

வழிநடத்துவோர்: அருட்தந்தையர்கள் மதுராங்கன் குரூஸ், ஜோர்ஜ் ஜீவராஜ், A.தேவதாசன், A.A.நவரெட்ணம், X.I.ரஜீவன், ஜோர்ஜ் திசாநாயக்கா



*மேலதிகத் தொடர்புகளுக்கு:*
அருட்தந்தை கிறிஸ்ரி பெர்னான்டோ
பங்குத் தந்தை
புனித இஞ்ஞாசியார் ஆலயம், அம்பாறை
063-2222430/071-8333200

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org